ஆரம்பக்கல்வி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 23 } நவம்பர் 1961 { இதழ் 11

காவலர் தலைவர் காட்டும் காரணங்கள்

இந்த நாட்டின் கல்வித் துறையோடு தொடர்பு கொண்டவர்கள் சென்ற சில ஆண்டுகளாகவே முக்கியமான ஒரு குறைபாட்டை அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களாக இருப்பவர்களும், கல்லூரிகளின் முதல்வர்களாக விளங்குபவர்களும், இந்த இருவகைக் கல்வி நிலையங்களின் ஆட்சிக் குழுக்களில் உறுப்பினர்களாகப் பணியாற்றுபவர்களும், கல்வித்துறை அதிகாரிகளாகத் தொண்டாற்றி வருபவர்களும் சொற்பொழிவாற்றும் வாய்ப்புகள் ஏற்படுகின்ற நேரங்களில் எல்லாம் இந்தக் குறைபாட்டை எடுத்துக் கூறாமல் இருப்பதில்லை. மேடைகளில் சொற்பொழிவாற்றுகின்ற நேரங்களில் மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையில், உரையாடுகின்றபோதும் இந்தக் குறைபாட்டைப் பற்றி மிக்க மனவருத்தத்துடன் அவர்கள் பேசத்தான் செய்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலேயும் கல்லூரிகளிலேயும் பயில்கின்ற மாணவர்களிற் பெரும்பாலோர் ஒழுங்கீனமான நடத்தைக்கும் கட்டுப்பாடற்ற போக்குக்கும் தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாக

விளங்குகிறார்கள் என்பதே அந்தப் பெருமக்கள் அனைவராலும் சுட்டிக் காட்டப்படும் குறைபாடாகும். இக்கால மாணவர் உலகத்தில் ஒழுங்கீனமும் கட்டுப்பாடின்மையும் ஓங்கி வளர்ந்து செழித்துப் பெருகியிருக்கின்றன என்பதை அந்த உலகத்தோடு தொடர்பு கொண்டுள்ள பெருமக்களில் எவரும் மறுக்கமாட்டார்கள். மிக உயர்ந்த ஒழுங்குமுறையும் மிகச் சிறந்த கட்டுப்பாட்டு உணர்ச்சியும் படைத்த மாணவர்கள் எவருமே இல்லை என்று நாம் கூற முடியாது. அப்படிப்பட்ட மிகச் சிறந்த—மிக இனிய—மிக நல்ல மாணவர்கள் பலர் ஒளி வீசித் திகழ்ந்தபடி இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் அப்படிப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. பெரும்பாலான மாணவர்கள் கட்டுப்பாட்டுணர்ச்சி அற்றவர்களாகவே காட்சி தருகிறார்கள்.

இந்த நாட்டின் எதிர்காலம் சிறப்பு மிகுந்ததாகவும் ஒளி படைத்ததாகவும் விளங்க வேண்டுமானால் இக்காலத்தில் மாணவர்களிடம் காணப்படும் ஒழுங்கீனமும் கட்டுப்பாடின்மையும் அகற்றப்பட்டு சிறந்த முறையில் தங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்லும் உயர்ந்த பண்பாடு அவர்களிடம் உருவாக்கப்படவேண்டும். அத்தகைய உயரியநிலை ஏற்படுத்தப்பட வேண்டுமானால் முதலில் செய்யப்படவேண்டிய செயல், ஒழுங்கீனமும் கட்டுப்பாட்டின்மையும் மாணவர்களிடம் ஏன் எப்படி எம்முறையில் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிவதாகும். நோய் தோன்றியதற்கான காரணங்களைத் தெள்ளத் தெளிவாக அறிந்தாலன்றி அந்த நோயைத் தீர்ப்பதற்கான மருந்தைத் தேடிப் பெற இயலாதல்லவா? "நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி, வாய்ப்பச் செயல்" என்பதுதானே தலைசிறந்த மருத்துவ முறை?

அத்தகைய மருத்துவ முறையைத்தான் கையாண்டுள்ளார் திரு பாலகிருஷ்ண ஷெட்டி. தமிழ்நாட்டின் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்னும் பொறுப்பும் சிறப்பும் மிகுந்த பதவியில் வீற்றிருக்கும் திரு ஷெட்டி, அண்மையில் சென்னை மாநிலக் கல்லூரியில் மாணவர்களிடையே கட்டுப்பாடு என்னும் பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றும்போது, இக்கால மாணவர்களிடையே கட்டுப்பாடற்ற போக்கு வளர்ந்து வருவதற்குரிய காரணங்கள் பதினாறு என்று தெரிவித்து அவை இன்னின்னவை என்பதையும் விளக்கியுள்ளார். அந்தக் காரணங்கள் பதினாறில், இரண்டொன்றைப் பொறுத்த அளவில் கருத்து வேறுபாடுகள் இருக்கக்கூடும். ஆனால் மொத்தமாகப் பார்க்கும் போது, காவல் துறையின் தலைவர் அவர்கள் கல்வித் துறையின் மிக முக்கியமான பிரச்சினை ஒன்றை மிகச் சிறந்த முறையில் அலசி ஆராய்ந்துள்ளார் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

சுதந்தரப் போராட்ட காலத்தில் இருந்த போராட்ட மனப்பான்மையை சுதந்தரம் வந்த பிறகும் மாற்றாமல் அப்படியே விட்டு வைத்திருப்பது.

மாணவர்களிடையே கட்டுப்பாடின்மை வளர்ந்து வருவதற்கான பதினாறு காரணங்கள் என்று திரு ஷெட்டி சுட்டிக்காட்டி உள்ளவற்றில் ஒன்று, இந்தக் காரணம். வெள்ளைக்காரர்களுடைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலைப் போராட்டம் விறுவிறுப்போடு நடத்தப்பட்ட காலத்தில், போராட்டத் தலைவர்களிற் பலர், படிப்பதை நிறுத்திவிட்டுப் போராட்டத்தில் வந்து கலந்து கொள்ளும்படி மாணவர்களை அழைத்தார்கள். நாடு முழுவதும் அடிமைச் சிறையில் சிக்குண்டு தவிக்கும்போது சிலர் மட்டும் பள்ளிக்கூடங்களில் உழன்று கொண்டிருப்பதால் உருவான பலன் எப்படி ஏற்படமுடியும் என்று ஆவேசத்தோடும் ஆக்கிரத்தோடும் அந்தத் தலைவர்கள் முழக்கமிட்டார்கள். இந்த வீர முழக்கம், எப்பாடு பட்டாவது இந்த நாட்டிற்கு விடுதலையைப்பெற்றே தீரவேண்டும் என்னும் உன்னதமான இலட்சியத்தில் அவர்களுக்கு இருந்த அளவுகடந்த ஆர்வத்தில் விளைவு என்றாலும், மாணவர் உலகத்தைப் பொறுத்த அளவில் இந்த அழைப்பு கட்டுப்பாடற்ற போக்குக்கு வித்திடுவதாகவே அமைந்து விட்டது. விடுதலைத் தலைவர்களின் அன்பழைப்பை ஏற்றுக் கல்லூரிகளை விட்டு வெளியேறி விடுதலைப் போர்க்களத்தில் குதிக்கும் துணிவு பெற்றவர்கள் மிகச் சில மாணவர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால் கல்லூரிகளில் தொடர்ந்து படித்த பிற மாணவர்களிடத்தில் கல்விப் பயிற்சியில் அக்கறையற்ற ஒரு போக்கை இந்த நிலைமை உருவாக்கிவிட்டது. இந்தக் குழப்ப நிலைமை மிகப் பெரிய அளவில் ஏற்பட்ட காரணத்தால் இந்த நாடு விடுதலைபெற்று ஆண்டுகள் பல கடந்துங்கூட இந்தக் குழப்பம் இன்னமும் முற்றிலும் தீரவில்லை.

தங்களுக்கு விருப்பமான கல்வியைக் கற்க வாய்ப்பில்லாத இன்றைய கல்வி முறையும், உருப்போட்டுத் தேர்ச்சிபெற்று விடக்கூடிய தேர்வு முறையும்.

கட்டுப்பாடின்மைக்கான இரண்டாவது காரணம் இது என்கிறார் திரு ஷெட்டி. கல்லூரிகளிற் பயில வருகிற மாணவர்களிற் பலருக்கு, அவர்கள் எந்தெந்தப் பாடங்கள் அடங்கிய பாடத் தொகுதியை விரும்புகிறார்களோ அது கிடைப்பதில்லை. அவர்கள் விரும்புகிற பாடத் தொகுதி ஒன்றாகவும் நடைமுறையில் அவர்களுக்குக் கிடைக்கிற பாடத்தொகுதி மற்றொன்றாகவும் அமைந்து விடுகிறது. குறிப்பிட்ட பாடத் தொகுதிகளையே ஏராளமான மாணவர்களும் விரும்பினால் அவர்கள் கேட்கும் தொகுதிகளையே எப்படித்

தர இயலும் என்று கல்லூரி நிர்வாகிகள் கேட்கக்கூடும். அவர்கள் கேட்பது நியாயமாகவும் இருக்கக்கூடும். ஆனால் நாம் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது, பல மாணவர்களுக்கு அவர்கள் விரும்பாத தொகுதிகள் கிடைப்பதால் படிப்பதில் அவர்களுக்கு இயற்கையாக இருக்கவேண்டிய ஆர்வம் குறைந்து அக்கறையற்ற தன்மை வளர்ந்து விடுகிறது என்பதைத்தான். தங்களுக்கு பிடித்தமில்லாத பாடங்களைப் படித்துத் தீரவேண்டிய சூழ்நிலைக்கு மாணவர்கள் உள்ளானால் கட்டுப்பாடற்ற போக்கு அவர்களிடம் உருவாவது இயற்கைதானே? இதே போலத்தான் உருப்போட்டுத் தேர்ச்சி பெற்றுவிடக்கூடிய இன்றைய தேர்வு முறையால் கட்டுப்பாடின்மை உருவாவதும் இயற்கை. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாக ஒரு மாணவன் கற்றுவந்த கல்வியின் தரத்தையும் திறத்தையும், இரண்டாவது அல்லது மூன்றாவது ஆண்டின் இறுதியில் பல்கலைக் கழகத்தால் மூன்று மணி நேரத்தில் நடத்தப்படும் ஒரே ஒரு தேர்வின் மூலம் அளந்து விடுவது என்பதுதான் இப்போதுள்ள தேர்வுமுறை. இப்படிப்பட்ட தேர்வு முறை நடைமுறையில் இருக்கும் காரணத்தால் எப்படியாவது இந்த இறுதித் தேர்வில் வெற்றி பெற்றால் போதும் என்கிற எண்ணம் மாணவர்களுக்கு உண்டாகிறதே தவிர ஒவ்வொரு நாளும் கல்லூரியில் அளிக்கப்படுகிற பாடங்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்கிற ஆர்வம் ஏற்படுவதில்லை. மூன்று ஆண்டுகளும் முறையாக வகுப்புகளுக்கு வந்து ஒழுங்காகப் பாடங்களைப் படிக்காமல் இருக்க மாணவர்களிற் பலர், தற்செயலாக அவர்கள் எதிர்பார்த்த கேள்விகளே இறுதித் தேர்வில் வந்த காரணத்தால் நன்றாக எழுதித் தேர்வில் வெற்றி பெறுவதையும், மூன்று ஆண்டுகளும் ஒழுங்காகப் படித்த மாணவர்கள் அவர்கள் எதிர்பார்த்த கேள்விகள் வராததால் தோல்வி உறுவதையும் பார்க்க நேரிடும் ஏனைய மாணவர்கள், ஒழுங்காகப் படிப்பதால் என்ன பலன் என்று எண்ணத் தொடங்கிவிடுகிறார்கள். இந்த எண்ணம் வளரும் போது கட்டுப்பாடின்மையும் கூடவே வளர்வதில் வியப்பென்ன இருக்கமுடியும்? இந்த நிலைமை மாறவேண்டுமானால், இறுதித் தேர்வுக்கு இப்போது உள்ள அளவுகடந்த முக்கியத்துவம் குறைக்கப்படவேண்டும். ஒரு மாணவனுக்கு உரிய மொத்த மதிப்பெண்கள் இரண்டாயிரம் என்றால், ஆயிரம் மதிப்பெண்கள் மட்டுமே இறுதித் தேர்வுக்கு ஒதுக்கப்பட்டு, மிச்சமுள்ள ஆயிரம் மதிப்பெண்கள் வாரந்தோறும் அவன் கற்றுவருகிற கல்வியின் தரத்திற்கு என்று ஒதுக்கப்படவேண்டும். ஒவ்வொரு மாணவனும் தேர்வில் வெற்றி பெற இறுதித் தேர்வில் இத்தனை எண்கள் பெற்றாக வேண்டும் என்று இப்போது உள்ள ஏற்பாட்டோடுகூட மூன்று ஆண்டுகளிலும் கல்லூரியில் அவன் பெருகிற பயிற்சிக்காக அளிக்கப்படு

கிற எண்களிலும் இத்தனை மதிப்பெண்கள் பெற்றாக வேண்டும் என்ற ஏற்பாடு உருவாகவேண்டும். இப்படி ஓர் ஏற்பாடு இருக்குமானால் நாள்தோறும் புகட்டப்படுகிற கல்வியில் அவன் இப்போது காட்டுகிற அக்கறையின்மை மறையும். கட்டுப்பாடு வளரும்.

கல்லூரிக்குப் போகும் பிள்ளைகளிடம் அவர்களுடைய பெற்றோரின் அக்கறையற்ற போக்கு

கட்டுப்பாடின்மைக்கான மற்றோர் காரணமாகத் திரு ஷெட்டி அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது இது.

இக்காலப் பெற்றோர்களிற் பலர், தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிகளில் அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் சேர்த்து விடுவதோடு தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று கருதுகிறார்கள். இதை விடப் பெருந்தவறு வேறு இருக்க முடியாது. தங்கள் பிள்ளைகள் ஒழுங்காகக் கல்விகற்று வருகிறார்களா என்பதையும், கல்வி நிலையங்களில் ஒழுங்காக நடந்து கொள்கிறார்களா என்பதையும் கூர்ந்து கவனித்து, அவர்கள் சிறுசிறு தவறுகள் செய்யும்போதே அவர்களைக் கண்டித்துத் திருத்தி ஒழுங்குபடுத்துவது பெற்றோர்களின் கடமையாகும். பிள்ளைகள் சிறுசிறு தவறுகளைத் தொடர்ந்து செய்துவரும் போதெல்லாம் வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டு அவர்கள் ஏதாவது பெருந்தவறைச் செய்துவிட்டுத் திண்டாடும்போது மட்டும் கைகளைப் பிசைந்துகொள்வதும் "இப்படியா செய்தான் என் பிள்ளை—வீட்டில் சேர்க்கிறேனா பார் அவனை" என்று முழக்கமிடுவதும் பயனற்ற செயல்கள் ஆகும். "இளைதாக முள்மரம் கொல்க! களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து" என்னும் வள்ளுவர் வாய்மொழியின் உட்பொருளை இக்காலப் பெற்றோர்களிற் பலர் புறக்கணிப்பதால் பிள்ளைகளும் சரி, பெற்றோர்களும் சரி, பல வகைத் தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் ஆளாகி அல்லல் உறுவது கண்கூடு.

கல்வியைக் கற்பித்துவிட்டு மற்றபடி மாணவர்களிடம் அக்கறை காட்டாமல் ஆசிரியர்களும், ஆசிரியர்களிடம் மரியாதை காட்டாமல் மாணவாகளும், இருப்பது.

கட்டுப்பாடின்மைக்கு இதுவும் ஒரு காரணம் என்று தெரிவித்துள்ளார் காவலர் தலைவர். இன்றைய தினம் உள்ள நிலைமையில் கல்லூரிகளிற் பணியாற்றும் ஆசிரியர்கள், பாடங்களைப்பற்றிய விரிவுரைகளை ஆற்றிவிட்டு மற்றபடி மாணவர்களிடம் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ள முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒரே வகுப்பை வாரம் முழுவதும் எடுப்பதில்லை. ஒவ்வொரு வகுப்புக்கு இரண்டு அல்லது

மூன்று மணி நேரம் என்கிற முறையில் பல்வேறு வகுப்புகளுக்குச் சென்று பல பாடங்களை எடுக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வகுப்போடு அவர்களுக்கு இருக்கிற தொடர்பெல்லாம் ஒரு வாரம் முழுமைக்குமாக இரண்டு அல்லது மூன்று மணி நேரம் அந்த வகுப்புக்குப் பாடம் எடுப்பது என்பதுதான். இந்தச் சுருங்கிய கால அளவிற்குள் மாணவர்களிடம் தனித்தனியாக அவர்கள் எப்படித் தொடர்பு கொள்ளமுடியும்? அதுமட்டுமல்ல. பல வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை, எண்பது, நூறு, நூற்றி இருபது என்கிற மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது. ஒரு வகுப்பில் நூறு மாணவர்கள் இருப்பார்களானால் அந்த வகுப்பை வகுப்பு என்று அழைப்பதைவிடப் பொதுக்கூட்டம் என்று அழைப்பது தானே பொருத்தமாக இருக்கமுடியும்? இவ்வளவு பெரிய வகுப்பில் உள்ள மாணவர்கள் ஒவ்வொருவருடைய தனித்தனிப் பண்புகளையும் பாடங்களைக் கூர்ந்து கவனித்து அறியும் வேகத்தையும் எப்படி ஆசிரியரால் கண்டறிய முடியும்? எக்காரணத்தை முன்னிட்டும் நாற்பது பேருக்கு மேல் ஒரு வகுப்பில் மாணவர்கள் இருத்தல் கூடாது என்கிற நிலை உருவானால் தவிர, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நெருக்கமான தொடர்போ பற்றோ பாசமோ ஏற்பட வழியில்லை.

கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆசிரியர்களிடம் மரியாதை காட்டாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் மிக முக்கியமான காரணம், ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிற ஊதியம் மிகக் குறைவாக இருப்பதே ஆகும். இவ்வளவு குறைந்த ஊதியம் வாங்குபவர்தானே இந்த ஆசிரியர் என்று பலமாணவர்கள் அலட்சியமாக எண்ணுகிற அளவுக்கு ஆசிரியர்களின் ஊதியமும், அதன் விளைவாக அவர்கள் வாழ்க்கைத் தரமும் குறைந்த நிலையில் உள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து, ஆசிரியர்களின் ஊதியமும் கணிசமான அளவுக்கு உயருமானால் இரு சாராருக்கும் இடையே இப்போது இருப்பதை விடச் சிறந்த நல்லுறவு உருவாகும்.

அரசியல் வாதிகள் சிலரின் வலை வீச்சு — கட்டுப்பாடற்ற போக்கு மாணவர்களிடையே பெருகுவதற்கு இதனையும் ஒரு காரணமாகக் காட்டுகிறார் திரு. ஷெட்டி. ஒரு சில அரசியல் வாதிகள் தங்கள் கட்சிகளின் வளர்ச்சிக்காக மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்வது உண்மைதான். வட இந்திய மாநிலங்களில் இந்தப் போக்கு அதிகமாகப் பரவியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், அரசியல் வாதிகள் மாணவர்களை அரசியலுக்கு இழுப்பதாகக் கூறுவது அவ்வளவு உண்மை

யில்லை: மாணவர்களிற் பலர் தாங்களாகவே அரசியல் வலைக்கு வந்து சேர்கிறார்கள் என்று வேண்டுமானால் கூறலாம். இப்படி அவர்கள் வந்து சேர்வதற்கான தலையாய காரணம், அவர்களுடைய ஓய்வு நேரத்தையும் இளமை ஆர்வத்தையும் பருவத்திற்குரிய சுறு சுறுப்பையும் ஆக்க முறையில் பயன்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளும் அமைப்புகளும் போதுமான அளவிலும் தேவையான வகைகளிலும் ஏற்படாததே ஆகும் என். சி. சி. எனப்படும் தேசீய மாணவர் படை பல மாணவர்களின் நோக்கையும் போக்கையும் சிறந்த திசை களில் திருப்பி யிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் மாணவர்கள் அத்தனைப் பேருமே என். சி. சி. யில் சேர்வதற்குரிய உடல் வலிமையோ மனப்போக்கோ நேர வசதியோ பெற்றிருக்க முடியாது. ஆகவே என். சி. சி. யில் சேர முடியாத மற்ற மாணவர் களுக்கு ஏற்ற பல திற விளையாட்டுக்களும் வேறு பல ஆக்க வேலை அமைப்புக்களும் உருவாக்கப்பட வேண்டும். மாணவர்களின் இளம் பருவத்துச் சுறுசுறுப்புக்கும் ஆர்வத்திற்கும் துடிதுடிப்புக்கும் அரசியல் உலகத்தில் போதுமான வாய்ப்புகள் இருப்பதாலேயே மாணவர்கள் பலர்-அரசியல் தலைவர்கள் அழைத்தாலும் அழைக்கா விட்டாலும் - அங்கே செல்கிறார்கள். அத்தகைய வாய்ப்புகள் கல்லூரி வட்டாரத்திலேயே ஏற்படுத்தப்படுமானால் அவர்கள் அங்கே செல்லமாட்டார்கள என்று நாம் எதிர்பார்க்கலாம்.

எதிர்காலம் குறித்த தெளிவில்லாத பயம்-கட்டுப்பாடின்மை வளர்வதற்கான மற்றோர் காரணம் இது என்பது திரு. ஷெட்டி அவர்களின் கருத்து உண்மைதான். கல்லூரிக் கல்வியைச் சிறந்த முறையில் முடித்து முதல்தரமான பட்டம் பெற்று வெளி உலகத்துக் குச் சென்ற மாணவர்களிற் பலர் நல்ல வேலையோ போதிய வரு மானமோ இல்லாமல் திண்டாடுவதைப் பார்க்கும் மாணவர்கட்குத் தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றிய ஒரு வகை அச்சம் உருவாகத் தான் செய்யும். "இன்று நாம் கற்கும் இந்தக் கல்வியால் நாளைக்கு நமக்கு ஒரு நல்ல வேலை வாய்ப்பைக்கூட ஏற்படுத்தித் தர முடியாது போயிருக்கிறதே" என்ற ஐயப்பாட்டு உணர்ச்சியும், "இதனைக் கூடச் செய்ய முடியாத இந்தக் கல்வியை எதற்காகத்தான் நாம் கற்கிறோமோ" என்கிற சலிப்பு மனப்பான்மையும் மாணவர்கள் பலரிடம் ஏற்படுவது இயற்கை. இந்த அச்சம் போக வேண்டு மானால், பெரிய தொழில்களும் சிறிய தொழில்களும் நாட்டில் ஏராளமாக வளர்ந்தாக வேண்டும். கலைக் கல்லூரிகளின் எண்ணிக் கையை ஓர் அளவோடு நிறுத்திக்கொண்டு மேலும் மேலும் தொழிற் கல்லூரிகளைப் பெருக்க வேண்டும். "என்னுடைய எதிர்காலத்தை என்னால் ஒளிமிகுந்ததாக ஆக்கமுடியும்—அதற்குத் தேவையான தைரியமும் ஆக்கவேலை ஆற்றலும் என்னிடம் உண்டு" என்று

ஒவ்வொரு மாணவனும் நெஞ்சு நிமிர்ந்து கூறவல்ல சூழ்நிலையை அரசாங்கமும் சமுதாயமும் நாட்டில் உருவாக்க வேண்டும்.

இக் கால மாணவர்களிடம் கட்டுப்பாடின்மை வளர்வதற்குரிய பதினாறு காரணங்கள் என்று திரு. ஷெட்டி தெரிவித்துள்ளவற்றில், இதுவரை விளக்கிக் கூறப்பட்ட ஆறு காரணங்கள் போக எஞ்சியுள்ள பத்துக் காரணங்கள் பின்வருபவை ஆகும்:

1. இன்றைய உலகில் காணப்படும அமைதியின்மையால் மாணவர்களிடம் ஏற்படும் எதிரொலி.

2. மொழிக் கொள்கையால் ஏற்படும் குழப்பம்.

3. கல்லூரிகளில் பல காரணங்களால் மாணவர்களிடம் ஏற்படும் தவறான போட்டி மனப்பான்மை.

4. கல்லூரி மாணவர்களிடம் ஏற்படும் அரசியல் கோஷ்டிப் பூசல்கள்.

5. சில கல்லூரிகளின் நிர்வாகத் திறமைக் குறைவு.

6. விளையாட்டுக்களில் போதிய ஆர்வம் காட்டப்படாத நிலை.

7. மாணவர் சங்கச் சொற்போர்கள் முறைப்படி நடக்க ஆசிரியர்கள் வழிகாட்டாதது.

8. கல்வித் திட்டத்தில் ஒழுக்கப்பாடம் இல்லாதது.

9. குறுகிய வட்டாரப் பற்று.

10. ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் கல்லூரிகளில் சில மாணவர்கள், தனி வகையாக விளங்கித் தங்களை மற்றவர்களின் கவனத்திற்கு உள்ளாக்கப் பார்க்கும் மனப்பான்மை.

தமிழ் நாட்டுக் காவல் துறையின் முதற்பெருந் தலைமை அதிகாரியாக விளங்கும் திரு. பாலகிருஷ்ண ஷெட்டி அவர்கள் தெரிவித்துள்ள இந்தப் பதினாறு காரணங்களையும் தமிழ் நாட்டுக் கல்வித் துறையோடு தொடர்பு கொண்டுள்ள அத்தனைப் பேரும் ஊன்றிக் கவனித்து அலசி ஆராய்ந்து தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள முனைதல் இன்றியமையாதது, என்பது நம் அழுத்தந் திருத்தமான கருத்து ஆகும்.

கல்வி நிலைய நிர்வாகிகள், ஆசிரியப் பெருமக்கள், கல்வித் துறை அதிகாரிகள், நாடாளும் அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள்.

ஆகிய அனைவருடைய சிந்தனைக்கும் சிறந்ததோர் விருந்தாக இந்தப் பதினாறு காரணங்களும் அமைந்துள்ளன என்று கூறினால் அது மிகையாகாது

காரணங்களைக் காண்பீர்—ஆவன செய்வீர் என்று நல்லறிவாளர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

GOVERNMENT OF MADRAS
EDUCATION AND PUBLIC HEALTH
DEPARTMENT

Memorandum No. 84343 A/E2/61-1, Education,
Dated 27-9-61.

Sub: Appointment of Untrained Secondary Grade teachers in Aided Elementary Schools when the Secondary Grade Teachers working in the Higher Elementary Grade Posts

It has been brought to the notice of Government that untrained teachers of the Secondary Grade are appointed in Elementary schools under private management for teaching English when Secondary Grade trained teachers are workng inHigher Elementary Grade posts. The Director of public Instruction is requested to issue a circular to the effect that untrained teachers of Secondry grade should not be appointed in Elementary schools under private management to teach English when secondary Grade teachers working in Higher Elementary Grade posts in these schools, District Educational Officers should assess the requirements of elementary schools in this regard and see that secondary grade teachers working in Higher Elementary grade posts inaided Elementary schools are provided with appointment in Secondary grade posts before untrained teachers of secondary grade are allowod to be employed in aided elementary schools.

/true copy/

S. GUHAN,
Deputy Secretary to Government.

பனியும் குளிரும் மிகுந்த அலாஸ்கா

[டாக்டர் மா. இராசமாணிக்கனார், எம். ஏ. பி எச். டி.]

அலாஸ்கா என்பது வட அமெரிக்காவின் வடமேற்கில் உள்ள பெரிய நிலப் பரப்பாகும். அது முதலில் ரஷிய அரசாங்கத்துக்கு உரியதாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கத்தினர் அதனை 1867-இல் ரஷிய அரசாங்கத்தினிடமிருந்து விலைக்கு வாங்கினர்; அது முதல் அமெரிக்கர் அங்குக் குடியேறி நாட்டை வளப்படுத்த முயன்று வருகின்றனர்.

அலாஸ்கா ஏறக்குறைய ஐந்து லட்சத்து எண்பத்தையாயிரம் சதுரமைல் பரப்புள்ளது. இப்பரப்பில் ஏறத்தாழ் நூற்றில் ஒரு பங்கு நிலமே, இதுவரை அளந்து கணக்கிடப்பட்டுள்ளது. அலாஸ்கா பனி உறைந்து கிடக்கும் நிலப்பகுதியாகும். அங்கு நிலக்கரி, ஈயம், துத்தநாகம், நிக்கல், தகரம், இரும்பு முதலிய கனிப்பொருள்கள் நிலத்திற்கு அடியில் இருப்பதாக அமெரிக்கர் கண்டுள்ளனர். எனினும் பனி மிகுந்த அந்நாட்டில் இவற்றை வெட்டியெடுக்கும் முயற்சி சிறிதளவே தொடங்கப்பட்டுள்ளது. பனிப் படலங்களுக்குப் பக்கத்தில் அந்நிலத்திற்கு ஏற்ற மலர்கள் காண்கின்றன; அந்நிலத்தில் எரிமலைகள் இருக்கின்றன; பனி நிலத்துக் காடுகள் இருக்கின்றன; வால்ரஸ் சீல் முதலிய பனி நிலத்து உயிர்கள் வாழ்கின்றன. அமெரிக்க இந்தியரும் எஸ்கிமோக்களும் அங்கும் இங்குமாக வாழ்கின்றனர்.

ஊக்கமும் உழைப்பும் நிறைந்த அமெரிக்கர் அலாஸ்காவிற் குடியேறி அந்நாட்டின் பயனை நுகர விரும்பினர். ஆனால் அலாஸ்காவின் தென் பகுதியே அவர்கள் தங்கிவாழ ஏற்றதெனக் கண்டனர்; அங்குக் குடியேறி நிலத்தைத் திருத்தி வாழ வழி செய்து வருகின்றனர்; பனி நிறைந்த தரையைப் பண்படுத்தி 500 கல் தொலையுள்ள இரயில் பாதையை அமைத்துள்ளனர்; மூவாயிரம் கல தொலையுள்ள பெரிய பாதையை அமைத்துள்ளனர். எனினும், இரயில் பாதைகளிலும் பெரும் பாதைகளிலும் பனி உறைவதனால் செல்வது தடைப்படுகிறது. அதனால் அவர்கள் பல இடங்களுக்கும் வானவூர்திகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

அலாஸ்காவின் தென்பகுதியில் உள்ள குடியேற்றப் பகுதிகளில் பெரியது மதனுஸ்கா என்பது. அலாஸ்கா மலைத் தொடர்களை அடுத்துள்ள அப்பள்ளத்தாக்குப் பகுதியே முதன் முதல் குடியேறிய அமெரிக்கரால் 1911-இல் தேர்ந்தெடுக்கப்பட்டது. 1935

முதல் அமெரிக்க அரசாங்கத்தின் உதவியால் பனிநிலத்தை விளைநிலமாக்கும் முயற்சி தொடங்கப்பட்டது. இருநூறு அமெரிக்கர் தம் குடும்பத்தாருடன் அப்பள்ளத்தாக்கிற் குடியேறினர்; கூடாரங்களை அமைத்துக் கொண்டு வாழத் தொடங்கினர்.

அவர்கள் குடியேறிய முதல் வருடக் கோடையில் நிலத்தை அளந்தனர்; பயிர் நிலங்களை அமைக்கவும், வீடுகளைக் கட்டவும் தானியக் களஞ்சியங்களைக் கட்டவும், தோட்டங்களை அமைக்கவும், பாதைகளை அமைக்கவும், இடங்களை ஒதுக்கி வேலை செய்யத் தொடங்கினர். அவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குள் ஏறக்குறைய நூறு களஞ்சியங்கள் கட்டப்பட்டன; நூற்றுமுப்பத்தேழு கிணறுகள் வெட்டப்பட்டன; பல பாதைகள் அமைக்கப்பட்டன. இங்ஙனம் வேலை விரைந்து நடைபெறுவதைக் கண்டு அமெரிக்கர் பலர் ஆண்டுதோறும் அப்பள்ளத்தாக்கில் குடியேறினர்; இன்று ஏறக்குறைய நாலாயிரம் மக்கள் அங்கு வாழ்கின்றனர்; பதினாயிரம் ஏகர் நிலம் பண்படுத்தப் பட்டுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு 15 ஏகர் நிலம் கொடுக்கப்படுகிறது. அக் குடும்பத்தார் முதலாண்டில் பத்து ஏக்கர் நிலத்தைப் பயிர் நிலமாக்க வேண்டும்; இரண்டாம் ஆண்டில் இருபது ஏக்கர் நிலத்தை விளைநிலமாக்க வேண்டும்; மூன்றும் ஆண்டில் தாம் வாழத்தக்க வீட்டைக் கட்டிக்கொள்ள வேண்டும். இவ்வாறே ஆண்டுதோறும் நிலத்தைப் பண்படுத்திக் கொண்டே செல்ல வேண்டும் என்பது அரசாங்க விதி. அப்பள்ளத்தாக்கில் கோடையில் 91 டிகிரி உஷ்ணமும் குளிர் காலத்தில் 13 டிகிரி உஷ்ணமும் இருத்தலால், மக்கள் ஒருவாறு நிலைத்து வாழ்கின்றனர்; நிலத்தை நன்முறையிற் பண்படுத்தி வருகின்றனர்.

மதனுஸ்காப் பள்ளத்தாக்கில் வாழ்பவர் மே மாதத்தில் பயிர் வேலையைத் தொடங்குவர். அங்கு இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தில் உருளைக் கிழங்கு பயிராக்கப்படுகிறது. ஓர் ஏக்கரில் சராசரி ஐந்து 'டன்' நிறையுள்ள உருளைக் கிழங்கு பயிராகிறது. கோசுக் கீரை (காபேஜ்) காலிப்ளவர் முதலிய குளிர் நிலத்துக்காய் கறிகளும் பயிராகின்றன. அவை அனைத்தும் மிகப் பெரிய அளவில் பயிராகின்றன. அவற்றுள் ஐம்பது பவுண்டு நிறையுள்ள கோசுக் கீரையும் உருளைக்கிழங்கும் அங்குக் காணப்படுகின்றன.

ஆண்டுக்கு ஒருமுறை அலாஸ்கா முழுமையிலும் பயிராகும் பொருள் வகைகளும் செய்யப்படும் பொருள் வகைகளும் மதனுஸ்காவில் பொருட்காட்சியாக வைக்கப்படுகின்றன; மே மாதத்தில் குடியேற்ற நாள் விழாக் கொண்டாடப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்கம், பொது நலக் கழகம், சுகாதாரக் கழகம், பெற்றோர்—ஆசிரியர் கழகம் முதலிய கழகங்கள் அங்கு வேலை செய்கின்றன; செய்தித் தாள்கள் இரண்டு வெளியிடப்படுகின்றன. அங்கு ஒரு பொது நூலகமும் இருக்கின்றது; பெரிய மருத்துவ நிலையம் இருந்து, மக்களது உடல் நலத்தைக் கவனித்து வருகின்றது. தொடக்க நிலைப் பள்ளியும் உயர்நிலைப் பள்ளியும் பிள்ளைகளுக்குக் கல்விப்பணி புரிகின்றன. பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அழைத்துச் செல்ல உந்து வண்டிகள் பயன்படுகின்றன. அலாஸ்காப் பல்கலைக் கழகத்தில் ஏறத்தாழ ஆயிரத்து முந்நூறு மாணவர் கல்வி கற்கின்றனர். அவர்கள் பயிர்த்தொழில், இலக்கியம், விஞ்ஞானம், குடும்ப ஆட்சி, நில நூல், சுரங்க வேலை முதலிய பல துறைகளிற் பயிற்சி பெறுகின்றனர்.

அலாஸ்காவில் சுமார் எண்பது லட்சம் ஏக்கர் நிலம் பயிர்த் தொழிலுக்கு ஏற்றது என்பது அமெரிக்க அரசாங்கத்தின் கருத்து. இதுவரை ஏறக்குறையப் பன்னிரண்டாயிரம் ஏக்கர் நிலமே விளைநிலமாக்கப் பட்டுள்ளது. கனிச் சுரங்கங்களில் வேலை தொடங்கப் பட்டுள்ளது. அங்குப் பயிர்த் தொழிலும் மீன் பிடிக்கும் தொழிலுமே முக்கியமான தொழில்களாக இருக்கின்றன. அலாஸ்காவில் உள்ள அமெரிக்க இந்தியர் மர வேலையிலும் கூடை பின்னுவதிலும் தங்கள் தொழில் திறனைக் காட்டுகின்றனர். கூடை பின்னல், தோலுடைகளைத் தயாரித்தல், மரம், எலும்பு, தந்தம் ஆகியஇவற்றைக்கொண்டு வேலைப்பாடு மிகுந்த பொருள்களைச் செய்தல் என்னும் வேலைகளில் எஸ்கிமோக்கள் ஈடு பட்டுள்ளனர்.

அலாஸ்காவில் சட்டசபை இருக்கின்றது. அலாஸ்காப் பிரதிநிதிகள் அமெரிக்கச் சட்டசபையில் உறுப்பினராய் இருக்கின்றனர். அலாஸ்காவில் குடியேறியவருள் ஒருவர், அமெரிக்கக் குடியரசுத் தலைவரால், அலாஸ்காவின் கவர்னராக நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நியமிக்கப் படுகிறார். பனி நிறைந்த அலாஸ்காவைப் பண்படுத்தும் அமெரிக்கரின் ஊக்கமும் உழைப்பும் பாராட்டத்தக்கனவாகும்.

—பத்ம ஜோதி

தமிழ் மொழிக்கு இந்தி எழுத்தா ?

(கி. ஆ. பெ. விசுவநாதம்)

பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள் ஒன்றுகூடி, இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளையும் இந்தி எழுத்துக்களிலேயே எழுதுவது என்று முடிவு செய்திருக்கிறார்களாம். இச்செய்தி முன்பு நாளிதழ்களில் வெளிவந்தது. அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் இது வெறும் ஆலோசனை என்றார்கள். இப்போது அது காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிற் காணப்படுகிறது. இது பற்றிக் கூறவேண்டுமானால், தமிழகத்தை நோக்கி ஒரு "பேரழிவு" வந்துகொண்டிருக்கிறது என்றே கூறவேண்டியிருக்கும்.

உரிமை

இம் மாநாட்டிற்குச் சென்று வந்த நமது மாநில முதல் அமைச்சர் இம்முடிவைப்பற்றி இன்றுவரை எதுவும் கூறவில்லை. இதை அவர் ஏற்றுக்கொண்டு வந்தாரா? அல்லது மறுத்துவிட்டு வந்தாரா? என்பது தெரிந்தாகவேண்டும். அதையும் அவர் விரைவில் வெளிப்படையாகக் கூறியாக வேண்டும். இவ்வாறு கட்டளையிட தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

வேற்றுமைக்கு வித்து

ஒரு நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்கள் ஒன்றுசேர மறுப்பார்களானால், அதற்குரிய காரணங்களும் பல்வேறாகவே இருக்கும். அவற்றை ஆராய்வதைவிட்டு அவை அனைத்திற்கும் காரணம் அவர்களது மொழிகளுக்குத் தனித்தனியான எழுத்துக்கள் இருப்பதுதான் என எண்ணுவது உண்மைக்கு மாறானது. அவர்களது மொழிகளையெல்லாம் ஒரே எழுத்தில் எழுத வைப்பதுதான் அவர்களை ஒற்றுமைப்படுத்தும் வழி எனக் கருதுவது நகைப்புக்கு இடமானது. கூறவேண்டுமானால் அதை வேற்றுமைக்கு வித்திடும் வழி வேண்டும்.

முழு நிறைவு

ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வோர் எழுத்தும், எழுத்திற்கோர் ஒலியுமிருந்து அவ்வம் மொழியைச் சிறப்பித்து வருகின்றன. ஓர் இன மொழியின் எழுத்தைக்கொண்டு மற்றோர் இன மொழியை எழுதும்படி வற்புறுத்துவது கொடுமையாகும். அவ்வாறு எழுதுவதனாலும், அதன் ஒலியும் மாறுபட்டு, மொழியும் சிதைவுபட்டுப் போய்விடும். இக்கருத்தில் மற்ற மொழிகளைப்பற்றிச் சிறிது மாறுபாடுகள் தோன்றினாலும் தமிழைப் பொறுத்தவரையில் இது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

தமிழ் மொழியின் எழுத்துக்களும், அதன் ஒலிகளும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியவை; முழு நிறைவு பெற்றவை. மிக அண்மையில் தோன்றிய இந்தியை எழுதுவதற்குப பயன்படுகின்ற தேவநாகரி எழுத்துக்கள் முழு நிறைவு பெருதவை. அதன் குறைபாடுகள் நீக்கவும் முடியாதவை. இக்குறைவைக் கொண்டு நிறைவை எழுதவும் ஒலிக்கவும் முடியாது.

இயல்

இந்தி எழுத்துக்களில் "எ", "ஒ" குறில்கள் இல்லை. அவற்றிற்கெல்லாம் "ஏ", "ஓ" நெடில்களையே பயன்படுத்தியாக வேண்டும். அவ்வாறு பயன்படுத்தித்தான் "பொன்மலை"யைப் "போன்மலை" என்றும், "பொறையாறு" என்பதைப் "போறையாறு" என்றும் எழுதியிருக்கிறார்கள். இந்தி எழுத்துக்களைக் கொண்டு "ஒடு, ஒடி, ஒட்ட, ஒட்டு, ஒட்டை, ஒத்து" என எழுத இயலாது. அவற்றை "ஓடு, ஓடி, ஓட்ட, ஓட்டு, ஓட்டை, ஓத்து" என்றுதான் எழுத முடியும்.

"பொடி, பொட்டு, பொதி, பொது, பொய், பொத்தல்" என்பவைகளை இந்தி எழுத்துக்களில் எழுதினால், அவற்றை "போடி, போட்டு, போதி, போது, போய், போத்தல்" என்றுதான் படிக்கவேண்டிவரும்.

"செல், வெல், மெல், கெடு, பெண், எங்கு" என்பவைகளை இந்தி எழுத்துக்களைக்கொண்டு எழுத முடியாது. எழுதினால் "சேல், வேல், மேல், கேடு, பேண், ஏங்கு?" என்றே இருக்கும்.

"கொடி, கொடு, கொதி, கொடை, கொட்டு, கொட்டை" என்று எழுதினால், அவை "கோடி, கோடு, கோதி, கோடை, கோட்டு, கோட்டை" என்றே காட்சியளிக்கும்.

"தொகை, தொலை, தொடி, தொண்டு" என இந்தி எழுத்துக்களில் எழுதப்பெற்றிருக்குமானால், அதைப் படிப்பவர்கள் "தோகை, தோலை, தோடி, தோடு, தோட்டி, தோண்டு" என்றே படித்தாகவேண்டும். எழுத்து குறிலும், நெடிலும் தான என்றாலும், பொருளில் பெரும் வேற்றுமை காணப்படும். "அரிசி நொய்" என்பதை "அரிசி, நோய்" என்று இந்தியில் எழுதினால் அதன் பொருள் எங்குபோய் நிற்கும்?

தமிழ்மொழியை இந்தி லிபியில் எழுதத்தொடங்கினால், ஒ, கொ, ஙொ, சொ, ... னொ என்கிற 19 எழுத்துக்களும், எ, கெ, ஙெ, செ, ... னெ என்கிற 19 எழுத்துக்களும், அவ்வெழுத்துக்களைத் தலைப்பிற்கொண்ட ஏறத்தாழ 8700 தமிழ்ச் சொற்களும் அன்றே இறந்துபட்டுப் போய்விடும்.

இசை

தமிழ் இசைக்கும் தாளத்திற்கும் ஏற்ப இந்தி எழுத்துக்களில் தமிழ்ப்பாடல்களை எழுத இயலாது. எழுதினால், பாட்டிற்கும், பண்ணுக்கும் இடையில் ஒரு பாலம் அமைக்க வேண்டிவரும். தமிழ் எழுத்தையும், இந்தி லிபியையும் ஒலிப்பதில் ஓசையின் மாத்திரை அளவு கூடியும் குறைந்தும் வருவதால், அது தமிழ் இசையின் பண்பையே கொலை செய்துவிடும்.

இக் கொலை எப்படி இருக்கும் என்பதை அறியவேண்டுமானால், அருணகிரிநாதர் திருப்புகழ் ஒன்றை இந்தி லிபியில் எழுதும்படிச் செய்து அதை ஒரு குசராத்தி அல்லது மார்வாடியிடம் கொடுத்து பாடச்சொல்லிக் கேட்பதன் மூலம் நன்கறியலாம். பாடத்தொடங்கும் பொழுதே தமிழும் அதன் இசையும், தாளமும் அதன் கட்டும், பண்ணும் அதன் இனிமையும், பாடலும் அதன் நயமும் பாழ்ப்பட்டுப் போவதைக் காணலாம் இதனால், "தமிழ் இசைக்கு இந்தி எழுத்து இசையாது" என்பதும் புலனாகும்.

நாடகம்

ஒரு நாடகத்திற்கு உயிரளிப்பது அதன் உரையாடல் (வசனம்). தமிழ் உரையாடலை இந்தி எழுத்துக்களில் அமைக்க வாராது அதற்குப் பொருட்டுகள் நான்கு:

(1) "எ" "ஒ" குறில்கள் இல்லை. (2) "ள" ஒலியில்லை. (3) "ழ" எழுத்து இல்லை. (4) ய், ர், ல், வ், ம், ஒற்றெழுத்துகள் கிடையாது என்பதே. தமிழ் எழுத்துக்குள் தனிச் சிறப்பு "ழ"கரத்தால் அமைந்தது தமிழ் ஒலிக்குள்ள தனிச் சிறப்பு அதன் "ள", "ல"; "ழ" ஒலிச் சிறப்புக்களால் அமைந்தது. இந்த நான்குமில்லாத ஒரு லிபியைக்கொண்டு தமிழ் உரை நடையை எழுதவோ சொல்லவோ முடியுமா என்பது எண்ணிப் பார்க்கவேண்டிய ஒன்று. எண்ணிப்பார்த்து அறிய முடியாதவர்கள் படித்துப் பார்த்தாவது உணரலாம் அல்லவா? படியுங்கள்.

"அருள்மொழியே, ஆசைக் கிளியே, என் உள்ளத்தைப் பாழாக்கிக் கொலை செய்து விடாதே" என்ற உரையாடலை இந்தி லிபியில் எழுதினால், "அருல மோலியே. ஆசைக் கிலியே, என்னுல்லத்தைப் பாலாக்கிக் கொலை சேய்து விடாதே" என்றுதான் இருக்கும். எப்படி இந்த வசனம்? இது பெரும் விசனம். விரிவு எதற்கு? அதனால் "தமிழ் மொழி" என்றுகூட எழுத வராது. "தமிலமொலி" என்றே அது எழுதும்; "தமில மோலி" என்றே அது ஒலிக்கும்.

முடிவு

"எழுத்திலக்கணம், சொல்லிலக்கணங்களைப் பெற்று மூவா

யிரம் ஆண்டுகளாகச் சிறந்து விளங்கி வந்த 'தொல்காப்பியம்' இந்த நூற்றாண்டில் அழிந்து ஒழிந்து போயிற்று" என்று நமக்குப் பின்னே தோன்றுகிற வரலாற்றுக்காரர்கள் எழுதுவார்கள் என்றுதானே எதிர்பார்க்கிறீர்கள்? அப்படிக் கூட இராது. அவர்கள் எழுதும் வரலாறு, "எ ழுத்திலக்கணம், சோல்லிலக் கணங்களைப் பேற்று மூவாயிரம் ஆண்டுகளாகச் சிறந்து விலங்கிவந்த 'தோல்காப்பியம்' இந்த நூற்றாண்டில் அலிந்து ஒலிந்து போயிற்று" என்றே இருக்கும்.

"ஒரு மக்களின் நாகரிகத்தை அழிக்கவேண்டுமானால், அவர்களின் மொழியை அழி. ஒரு மொழியை ஒழிக்கவேண்டுமானால், அதன் எழுத்தை ஒழி" என்பது ஒரு அழிவழக்கு. அது இன்று நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. தமிழனுக்கு இன்று மீதியாக இருப்பதெல்லாம் அவனது தாய்மொழி ஒன்றுதான்! அதற்குமா இந்த அழிவு?

"பட்டத்திற்கும், பதவிக்கும், பொருளுக்கும், புகழுக்கும் ஆசைப்பட்டு அலைகின்ற அரசியல் கட்சியினர்க்கு மொழி உணர்ச்சி என்றைக்கு வரும்?" என்று ஏங்கிய காலம் ஒன்று உண்டு. இன்று அவர்களனைவரும் தந்நலத்தைத் துறந்து தமிழ் நலங்காக்க ஒன்றுபட்டுப் போராடுங் காலம் வந்துவிட்டது.

தமிழ் மக்கள் விழித்தாக வேண்டும். தமிழகம் திரண்டாக வேண்டும். தமிழ்மொழி வாழ்ந்தாகவேண்டும்.

வாழ்க தமிழ்மொழி.

உங்களுக்குத் தெரியுமா?

வானத்தில் பறக்கும் பறவைகளில் மிக விரைவாகப் பறக்கும் பறவை யாது? கழுகுகளும், சிட்டு, புறுபோன்ற பறவைகள் எவ்வளவு வேகத்தில் பறக்கின்றன?

பொன்னிறம் வாய்ந்த பெருங் கழுகு வானத்தில் மணிக்கு 90 மைல் வேகத்தில் பறக்கக்கூடியது. இதுவே மிக விரைவாகப் பறக்கக்கூடிய பறவை. மற்ற சில கழுகுகள் மணிக்கு 50 மைல் வேகத்தில் பறக்கக்கூடியவை. மைனா, குருவி, கிளிபோன்ற சிறு பறவைகள் 20 மைல் வேகத்தில் பறக்கக்கூடியவையாகும்.

சூரியனின்று தோன்றும் சூட்டின் தன்மையை ஒப்பிட்டுக் காட்டு.

11,000,000,000,000,000 டன்கள் கரியை ஓரேசமயத்தில் எரித்தால் உண்டாகும் உஷ்ணம் தான் சூரியனில் ஒரு சமயத்தில் உண்டாகும் உஷ்ணத்திற்கு சமமாகும்.

(போதனு விஷயப் பூங்கொத்து)

காந்தியும் மாணவருலகமும்

மாணவர் உலகத்தில் கருத்து வேறுபாடுகள் மிகுந்து அதனால் பூசலும் புகைச்சலும் விளையக் காண்கிறோம். இவ்வொவ்வாத செய்கைகள் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனத்தில் வைத்துக் கொண்டால் விரைவில் தலை எடுக்காதவாறு மறைந்துவிடும்.

1. உன் கருத்துக்கு இசையாத பிறர் யாவரும் உனக்கு எதிரிகள் என்ற எண்ணத்தை அகற்று.

2. உனக்கிருப்பதாகப் பாராட்டிக்கொள்ளும் அளவுக்குப் பிறரிடமும் நேர்மையும் நன்னோக்கமும் உள்ளன என்பதை நினைவில் வை.

3. வினையையும் வினைபுரிவோனையும் வேறுபாடு செய். அப்பொழுதுதான் ஓர் சிறந்த முடிவுக்கு வருவாய்.

4. பிழை செய்தல் மனித இயல்பு. மன்னித்தல் தெய்வீகப் பண்பு. குற்றம் செய்ததற்காக வருந்தும் கழிவிரக்கம், தூய்மைப் படுத்தும் துடைப்பம்போன்று மாசுமறுவை நீக்கி மாண்புறச் செய்யும்.

5. காலத்தையும் முயற்சியையும் சிறுமை மிகுந்த விளைவில் கழிக்காமல் உயர்ந்த விளைவில் ஈடுபடுத்தவேண்டும். அதற்கான வழிமுறைகளை வகுத்து மாணவர்களின் சக்தியைத் திருப்பி நல்ல வடிகால்களில் பாயச்செய்யவேண்டும். உரையாடல், கலைநெறி கழகம் அமைத்தல், நாட்டு நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனிக்கச் செய்து சரியான முடிவுக்கு வருதல் முதலிய தொழில் முறைகளில் ஊக்குவித்தல்.

6. தனிப்பட்ட மனிதனால் உண்டாகும் நன்மை தீமை நாளடைவில் உலகத்தையே நாசம் செய்துவிடும். மாணவர்கள் எவ்வளவு சிறிய குற்றம் புரிந்தாலும் "பனைத்துணையாகக் கொள்வர் பழிநாணுவர்" என்பதற்கிணங்க ஒழுகல்வேண்டும். "தனி மனிதனின் தியாகத்தால் குடும்பமும், குடும்பத்தின் தியாகத்தால் தேசமும், தேசத்தின் தியாகத்தால் உலகமனைத்துமே சீரிய வாழ்வுபெற்று இலங்கும். தேசப்பற்றே ஐக்ய உலகப்பற்றுக்கு வித்தாகும்."

7. ஏழ்மையின் காரணமொன்றினால் மாணவர் பங்கெடுத்துக் கொள்ள இயலாத எந்தச் செயல்களையும், விளையாட்டுக்களையும் பள்ளி எடுத்து நடத்தல் கூடாது. மாணவர் தங்கள் வாழ்க்கையில் தேவைகளைப் பெருக்கிக்கொள்ளுதல் நன்மையின்பால் பட்டதன்று.

உண்டியிலும் உடையிலும் சிக்கனமும் எளிமையும் கொண்டிலங்குதல் வேண்டும்.

8. கொடுஞ்சொல்லும் செயலும் தவிர்த்து இன்னா செய்யாமையை நோன்பாக நோற்றல் நலம். பொறுமை, விட்டுக்கொடுக்கும் பான்மை, முதலிய அருங்குணங்களில் ஆசிரியர் சிறுவர்களைப் பயிற்றுவித்தல் வேண்டும். பொய்மையும் திரித்துக் கூறுதலும் இடம்பெறலாகா.

9. உலக ஐக்ய உணர்ச்சியும் ராஜ்யங்களிடையே நல்லுணர்வும் ஏற்படுத்துவது படிப்படியாக உலக அமைதிக்கே அடிகோலிடும். காந்தியத்தின் கோட்பாடே அந்த உன்னதமான இலட்சியத்து அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டுளது. ஆகவே காந்தியத்தைப் பள்ளியில் துவக்கவேண்டும். மனித இனமும் மாண்புறும். நாடும் முன்னேற்றம் அடையும். அணுகுண்டை அணுகுண்டால் அழிக்கமுடியாது. பகையைப் பகையால் வெட்டி வீழ்த்தமுடியாது. (ஹிரோஷிமா, இந்தியப் பிரிவினை. இராஜ்யங்களிடையே வேற்றுமை, மொழிப் பித்து, சாதி வெறி இவைகளைக் கொண்டு மேற்கூறிய உண்மைகளை விளக்குதல் வெண்டும்.

10. மகளிர் பள்ளியில் பணியாற்றும் பெண்பால் ஆசிரியர்கள் அதிகமான அக்கறையுடனும் பொறுப்புடனும் தங்கள் தொண்டையாற்றவேண்டும். தூய்மைக்கும் புனிதத் தன்மைக்கும் அவர்கள் தான் பொறுப்பாளியாவார்கள். அமைதி பேணும் அறச் செல்வியர்களாகவும் "அஹிம்சா" என்னும் இன்னா செய்யாமைக்கு எடுத்துக்காட்டாகவும் திகழவேண்டும். அவர்கள் செய்யும் ஒவ்வொரு செய்கையும் ஆண்மகளைச் சால்புடைய சான்றோனாக்குதல் வேண்டும். இழுக்கில் வீழ்த்துதல் கூடாது.

சிந்தனைச் சுடர்கள்

தன்னுடைய புகழும் பெருமையும் போனாலும் கவலையில்லை—சுயமாகச் சிந்திக்கிற உரிமையே தனக்கு வேண்டும் என்று எந்த மனிதன் எண்ணுகிறானோ அவனே இலட்சிய புருஷன், அவனையே நான் மதிக்கிறேன்; பாராட்டுகிறேன்.

—ஜேம்ஸ் லவல்

காலம் என்ற அன்னை பல பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறாள். அவர்களிலே ஒரு பிள்ளை மிகவும் மோசமானவன். அவன் பெயர் தான் மூடநம்பிக்கை.

—ஷெல்லி

உண்மையான ஆநந்தம் ஒரு கவிதையைப் படிப்பதிலே இல்லை; நம் வாழ்க்கையையே ஒரு கவிதையாக மாற்றுவதில் இருக்கிறது.

—காண்டேகர்

சென்னை ஜார்ஜ் டவுன் வட்டார உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் நண்பகல் உணவுத் திட்டத் தொடக்க விழா

18–11–61 அன்று நடைபெற்றபோது

விழாக் குழுத் தலைவர் "ஆரம்பக்கல்வி" ஆசிரியர்

திரு. பி. வீரராகவன் அவர்கள்

ஆற்றிய

வரவேற்புரை

பெருமதிப்பிற்குரிய உழவுத் துறை அமைச்சர் அவர்களே! பேரன்புகெழுமிய கல்வித்துறை இயக்குநர் அவர்களே! அறிவும் ஆற்றலும் நிரம்பிய கல்வி அதிகாரிகளே! எழிலும் ஏற்றமும் மிக்க பணியாற்றிவரும் தொடக்கப்பள்ளி நிர்வாகிகளே! சின்னஞ் சிறு குழந்தைகளின் அறிவுக் கண்களைத் திறக்கும் அரிய தொண்டினைப் புரிந்துவரும் ஆரம்ப ஆசிரியர்களே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கம். தமிழ்த் திருநாட்டு இளம் பிள்ளைகளுக்கெல்லாம் ஆரம்பக் கல்வியை அள்ளி வழங்கும் அரும்பெரும் பணியில் ஈடுபட்டுள்ள உங்கள் அனைவரையும் ஒருங்கே காணவும், கண்டு அளவளாவவும் எனக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பைப் பெறற்கரிய வாய்ப்பாகக் கருதி, நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

"எண் என்ப; ஏனை எழுத்து என்ப; இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்று சுவையும் பயனும் மிகுந்த முறையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயம்பியுள்ளார் வள்ளுவப் பெருந்தகையார். என்றாலும் சில ஆண்டுகளுக்கு முன் வரையில், ஆரம்பக் கல்வி என்றாலே அலட்சியத்தோடு பார்த்தவர்களும், அது ஏனய்யா நமக்கு என்று ஆத்திரத்தோடு கேட்டவர்களும் இந்த நாட்டில் ஏராளமாக இருந்தார்கள். ஆனால் இப்போதோ, செல்வமும் செல்வாக்கும் படைத்தவர்கள் முதல் அவை இரண்டும் அற்ற ஏழைப் பாட்டாளிகள் வரை உள்ள எல்லா மக்களும் கல்விப் பொருளின் அருமையையும் பெருமையும் அதனை எப்பாடுபட்டாவது பெற்றுத் தீரவேண்டியதன் அவசியத்தையும் மிக நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். எட்டுத் திக்கிலும் ஆரம்பக் கல்வி விரைந்து பரவவேண்டும் என்கிற ஆர்வம் எல்லோருடைய உள்ளத்திலும் வேரூன்றி

விட்ட நற்காலம் இது. நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டம் படைத்த நல்லோர் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியை அளிக்க வல்ல நிலைமை இது என்பதை யார் மறுக்க முடியும்?

ஆனால் ஒன்று. தமிழகத்தின் பல பகுதிகளில் ஆரம்பப் பள்ளிகள் அமைந்துள்ள இடங்களுக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் வாழும் வீடுகளுக்கும் இடையே குறிப்பிடத் தக்க தொலைவு இருக்கிறது. இப்படிப்பட்ட பகுதிகளில் உள்ள பிள்ளைகள், நண்பகல் நேரத்தில் பள்ளிக்கூடத்தில் விடப்படும் ஒரு மணி நேர இடைவெளியில் தங்கள் வீடுகளுக்குச் சென்று உணவு அருந்திவிட்டுத் திரும்பி வருவது என்பது இயலாத செயலாகும். பெரும்பாலான பெற்றோர்கள் ஏழைகளாக இருக்கும் காரணத்தால் தங்கள் வீடுகளிலிருந்து ஆள்மூலம் தங்கள் பிள்ளைகளுக்கு உணவு அனுப்பி வைப்பதும் அவர்களால் முடியாத செயலாக இருக்கிறது. இது மட்டுமல்ல. எண்ணற்ற பெற்றோர்கள் அளவற்ற வறுமையிற் சிக்குண்டு எல்லையற்ற துயரத்தில் மூழ்கியிருக்கும் காரணத்தால் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான உணவை அளிக்கும் ஆற்றல் அற்றவர்களாகவும் இருக்கிறார்கள். வேதனையும் வருத்தமும் அளிக்கத் தக்க இந்தச் சூழ்நிலையின் விளைவாக ஏழைப் பிள்ளைகளிற் பலர் பள்ளிக்கூடத்தில் பயிலும் போது நண்பகல் உணவு இல்லாமலே பட்டினியாக இருக்க நேரிடுகிறது. அப்படி இருப்பதால் அவர்களுடைய உடல் நலமும் கெடுகிறது; மன வளமும் குறைகிறது; கல்விப் பொருளை அள்ளி விழுங்குவதில் அவர்களுக்கு இருக்க வேண்டிய ஆர்வமும் சுருங்கிவிடுகிறது. பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப மறுப்பதற்குரிய தலையாய காரணமும் இதுவே ஆகும்.

ஆரம்பப் பள்ளிகளிற் பயிலும் ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் நண்பகல் நேரத்தில் பள்ளிக்கூடத்திலேயே இலவசமாக உணவு அளிக்கப்படுமானால் இந்தச் சிக்கல்களும் சங்கடங்களும் இருக்கமாட்டா; பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பத் தயங்கமாட்டார்கள்; பிள்ளைகளும் முழு ஆர்வத்தோடு கல்விப் பயிற்சியில் ஈடுபட்டு விரைந்து முன்னேறத் தொடங்குவார்கள். இந்த உயர்ந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்டுள்ள சிறந்த மாளிகைதான் நண்பகல் உணவுத் திட்டம் என்னும் அருமையான ஏற்பாடு.

இந்தச் சிறந்த ஏற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவந்து, பிற மாநிலங்களின் கவனத்தை யெல்லாம் ஈர்க்கத்தக்க வகையில் இதனை நடத்தி வருகிற சென்னை அரசாங்கத்தாரையும், அவர்களுக்கு இந்த எண்ணத்தை ஊட்டியதோடு மட்டுமல்லாமல் இதனைச்

செம்மையும் சிறப்பும் வாய்ந்த முறையில் நடத்திச் செல்வதற்கு அரும்பெருந் துணையாகவும் விளங்குகின்ற என் கெழுதகை நண்பர் —கல்வித் துறை இயக்குநர் திரு. N. D. சுந்தரவடிவேலு அவர்களையும், அன்னாரின் உற்ற துணைவர்களாக விளங்கி இந்தத் திட்டத்தின் வெற்றிக்காக ஓயாது பணியாற்றிவரும் இந்த வடசென்னை மாவட்டக் கல்வி அதிகாரி, ஜார்ஜ்டௌன் வட்டத் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்த ரேஞ்சில் 16 உதவி பெறும் பாடசாலைகளில் 480 குழந்தைகளுக்கு மத்திய உணவு அளிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் மிக உயர்ந்தது, மிகச் சிறந்தது, மிக விழுமியது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆரம்பப் பள்ளிகளிற் பயிலும் ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் இலவசமாக நண்பகல் உணவை அளிக்க வேண்டியது சமுதாயத்தின் தலைசிறந்த கடமை அல்லவா? சுவரை வைத்துத்தானே சித்திரத்தை எழுத முடியும்? உடம்பை வளர்த்தால்தானே, உயிரை வளர்க்கும் கல்வியை வளர்க்க முடியும்? இந்தக் காரணத்தால்தானே, திருமூலர் என்னும் பேரறிஞர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னாலேயே, "உடம்பார் அழியின் உயிரார் அழிவார்; உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்று இயம்பிச் சென்றார்? இதே காரணத்தால்தானே, திருவள்ளுவப் பெருந்தகையார், "பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என்று தெள்ளத் தெளியத் தெரிவித்துள்ளார்? "மண் திணி ஞாலத்து மன்னுயிர்க்கு எல்லாம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று 'மணிமேகலை' என்னும் செந்தமிழ்க் காப்பியம் சீரிய முறையில் செப்பியிருப்பதும் இதனால்தானே? ஆண்டவனேகூட ஏழை மக்களுக்கு உணவு உருவத்தில் தோன்றுவதாக நம்முடைய சமய நூல்கள் தெரிவிக்கின்றன அல்லவா? "உண்ணும் உணவு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை, எல்லாம் கண்ணன்" என்று ஆழ்வார்களில் ஒருவர் அழகுபடப் பாடியிருப்பது இதனால்தானே?

ஆன்றோராலும் சான்றோராலும் இப்படியெல்லாம் சிறப்பிக்கப்பட்டுள்ள உணவைப் பிற மக்களுக்கு இலவசமாக வழங்குவது உயர்ந்த செயலாகும். அப்படி வழங்கும் உணவைக் கல்வியின் வளர்ச்சிக்காக வழங்குவது அதனினும் உயர்ந்த செயலாகும். அமெரிக்காவிலுள்ள **கேர் ஸ்தாபனம்** பால், கோதுமை, அரிசி முதலியவைகளை இலவசமாக நமது ஏழைப் பிள்ளைகளுக்குக் கொடுத்துதவி வருவது மிகவும் பாராட்டத் தக்கதாகும். அத்தகைய உயரிய செயலில் இன்று முதல் நாமெல்லாம் ஈடுபடத்

தொடங்கியுள்ளோம் என்பதை எண்ணும்போது மகிழ்ச்சி நம் இதயத்தை முற்றுகை இடுவது இயற்கையே அல்லவா?

இன்று தொடங்கப்படும் நண் பகல் உணவுத் திட்டமானது மேலும் மேலும் உயர்ந்து ஓங்கி வளர்ந்து செழித்துச் சிறந்த வெற்றியை அளிப்பதற்கு உரிய முறையில் நீங்கள் அனைவரும் பணியாற்றவேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடும் பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன். இந்த இனிமையான விழாவில் வரவேற்கும் வாய்ப்பை எனக்கு அளித்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை இந்த அளவில் நிறுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

சந்திரனுக்குப் போய்வர டிக்கெட்!

1968-ல் அமெரிக்க விலை ரூ. 7.5 கோடி

சந்திரனுக்கு மனிதர்கள் சென்றுவருவது 1970ல் சாத்தியமாகும் என ஏற்கனவே அறிவித்துள்ள அமெரிக்கப் புறவெளிப் பயண ஸ்தாபனத்தார், சந்திரனுக்குப் போகவர டிக்கெட்டுகள் விலை நிலவரம் எப்படி இருக்கும் என்பது பற்றியும் இப்போது ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்த டிக்கெட் விலை 1968-ல் 1.5 கோடி டாலர்களாக (சுமார் ரூ. 7.5 கோடி) இருக்குமாம். ஆனால் அதே டிக்கெட்டின் விலை 1975-ல் 20 லட்சம் டாலர் (சுமார் ரூ. 1 கோடி) என்ற அளவுக்கு வெகுவாகக் குறைந்துவிடும் என அந்த ஸ்தாபனத்தார் எதிர்பார்க்கின்றனர். அதற்குக் காரணம் 1975-க்குள் விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டு, சந்திரனுக்கு மனிதனை ஏற்றிச்சென்று வரும் ராக்கெட் சாதனம் சம்பந்தப்பட்ட செலவுகள் குறைந்துவிடும் என நம்பப்படுகிறது.

நெடும்பலம் திரு. N. S. இராமலிங்கம் B. A., (DIP. POL. & PUB. ADMN.) தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் தலைமையில் 5–11–61ல் திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட உதவி பெறும் துவக்கப்பள்ளி நிருவாகிகள் ஆசிரிய நிருவாகிகள் விசேஷக் கூட்டத்தில்

நிறைவேறிய தீர்மானங்கள்

நம் நாட்டுத் தந்தையாகிய மகாத்மா காந்தியடிகளின் ஒப்பற்ற தலைமையில் தனது உடல் பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து நாட்டுப் பணியாற்றி வீரப்புகழ் பெற்றவரும், உயர் வீரம் செறிந்த தமிழ் நாட்டிலுள்ள திருமறைக்காட்டில் தோன்றியவரும், கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம்போன்ற கல்வி ஸ்தாபனங்களைத் தோற்றுவித்தவருமான காலஞ்சென்ற சர்தார் A. வேதரத்தினம் பிள்ளை அவர்களின் மறைவுக்கு நமது சங்கம் ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் இன்று கூடிய எல்லா அங்கத்தினர்களும் இரண்டு நிமிஷங்கள் மௌனமாக இருந்து அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறது.

1960–ம் வருஷத்திற்குக் கிடைத்த நிர்வாக மான்யம் குறைவாக வழங்கப்பட்டமை குறித்து நமது சங்கம் செய்துகொண்ட முறையீட்டைக் கனம் கல்வி அமைச்சர் அவர்களும், உயர்திரு கல்வி இயக்குநர் அவர்களும், உயர்திரு மண்டலக் கல்வி அதிகாரி அவர்களும் நன்கு பரிசீலனை செய்து நிர்வாகிகளுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பாக்கியுள்ள நிர்வாக மான்யத்தை வழங்க உத்தரவிட்டமைக்கு இக்கூட்டம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

நிர்வாகிகளுக்கு நிர்வாக மான்யத் தொகையில் பாதியை சென்ற ஜூலை மாதத்தில் வழங்கியதற்கு இக்கூட்டம் தன் நன்றியை அரசாங்கத்திற்கும் பொதுக்கல்வி இயக்குநர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளில் பணி புரியும் கஷ்ட நிலையிலுள்ள ஆசிரியர்களுக்குத் தேசிய நிதியிலிருந்து மான்ய உதவி வழங்க ஏற்பாடு செய்தமைக்கு இக்கூட்டம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

ஆரம்ப ஆசிரியர் குழந்தைகள் S.S.L.C. தேர்வில் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அவர்களது கல்லூரிப் படிப்பிற்கு இலவச சம்பள உதவியும் பிற உதவிகளும் செய்யப்படும்

என்று அரசாங்கத்தார் அனுகூலம் செய்தமைக்கு இக்கூட்டம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

25-9-61 தேதியுள்ள G. O. Ms. No. 2315-ஐ 24-10-61 தேதியுள்ள G. O. Ms. No. 2393-ஆல் ரத்து செய்ததற்கு இக்கூட்டம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

22-4-61ல் நடைபெற்ற நமது சங்க மாநாட்டில் தீர்மானித்த படி பள்ளி நிர்வாக செலவினங்கள் அதிகரித்து வருவதால் ஆசிரியர்களின் சம்பள விகிதத்தின் பேரில் கணக்கிடப்படும் மான்யத்தில் 15 சதவிகிதம் சேர்த்து நிர்வாக மான்யமாக பிரதி மாதமும் அளிக்கும் படியும், எக்காரணத்தைக் கொண்டும் குறைக்கப்படாத Fixed Flat Grant 15 சதவிகிதம் அளிக்குமாறு அரசாங்கத்தை கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

பிரதேசத்திற்குத் தக்கபடியும் பாடசாலைகளின் விஸ்தீர்ணத்திற்குத் தக்கவாறும் ஜில்லாக் கல்வி அதிகாரியால் கட்டட வாடகை அல்லது பழுது பார்க்க ஆகும் உத்தேசச் செலவு இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டு, அதனை மான்யமாக அளிக்குமாறு இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

ஆசிரியர்களின் சேமிப்பு நிதிக் கணக்குக்கு நிர்வாகத்தினர் கட்டவேண்டிய ரூபாய்க்கு 3 ந.பைசை அரசாங்கமே கட்டி உதவி செய்யுமாறு இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஊக்கமுடன் நன்றாக வேலை செய்ய ஷ 15 சதவிகிதத்திற்கு மேல் Efficiency Percentage Grant கல்வி அதிகாரிகள் அளிக்குமாறு அரசாங்கம் அவர்களுக்கு அதிகாரமளிக்க இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

எல்லா ஆசிரியர்களுக்கும் வீட்டுவாடகைப் படியைக் கொடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

14-9-55 தேதியுள்ள G. O. No. 1546-ன்படி சம்பள வசூல் செய்துவரும் பாடசாலைகளுக்கு பிரதேச வாரியாக (கார்ப்பொரேஷன், முனிசிபல் நகரங்கள், கிராமங்கள்) பிரதி வகுப்புக்கும் 11 மாதங்களுக்கு மட்டும் நிர்ணயிக்கப்பட்ட சம்பளக் கட்டணம் (School Fees) தற்போதுள்ள விலைவாசிகள் உயர்வாலும் 1 முதல் 5 வகுப்புகளுக்கு இலவசக் கல்வி ஏற்பட்டபடியாலும், நிர்வாகிகள் தங்கள் பாடசாலைகளைத் திறம்பட நடத்த முடியாத நிலையிலிருப்பதால் அக்கட்டண விகிதங்களை உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

1960-ம் ஆண்டில் சில நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்ட நிர்வாக மான்யத் தொகை அதிகமாக வழங்கப்பட்டதெனக் கருதி நிர்வாகி

களிடமிருந்து திரும்பவும் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைத் தவிர்த்து அத்தகைய நிர்வாகிகள் பாதிக்கப்படாமல் பாடசாலைகளைத் தொடர்ந்து திறம்பட நடத்துவதற்கு வகை செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 1—4—58-க்குப் பிறகு எந்தத் தேதியில் எந்த வகுப்பைப் போதிக்க நியமனம் செய்யப்பட்டாலும் அவர்களுக்கு செகண்டரி கிரேடு சம்பள விகிதப்படியே சம்பளம் கொடுக்கவேண்டுமாய் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது. 1958 ஜூனில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குக் கொடுபடவேண்டிய கற்பிப்புக் கொடையை வழங்க ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொள்ளுகிறது.

மாணாக்கர்களின் கல்வித்திறன் திருப்திகரமாக அதிகரிக்க ஆசிரியர்—மாணவர் புதிய விகிதத்தை 35-லிருந்து 25—ஆகக் குறைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.

வேதாரண்யம் பஞ்சாயத்து யூனியனால் நிர்வாகிகளுக்குக் கொடுக்கவேண்டிய அடியிற்கண்ட உண்டியல்கள் இன்றுவரை கொடுபடாமல் இருப்பதால் அவற்றை இனியும் காலதாமதமின்றி, நிர்வாகிகளுக்குக் கொடுக்கும்படிக் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த வேதாரண்யம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் அவர்களிடம் நேரில் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

1. 30—9—61 தேதியுடன் முடிவாகும் காலாண்டுக்கான மதிய உணவு (Advance) மான்யம்.

2. (Refix) செய்த நிர்வாக மான்யம்.

3. முதியோர் பாடசாலைகளுக்கு அளிக்கப்படவேண்டிய கற்பிப்புக்கொடை.

அன்னாருக்குத் திரும்பவும் கடிதம் மூலமாக ஞாபகப்படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நமது மாநில சங்கக் கூட்டத்தை வரும் டிஸம்பர் மாதத்தில் நமது மாவட்டத்தில் தஞ்சை நகரில் கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மேற்கூறிய தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர அரசியலாரையும், கல்வி இலாகா அதிகாரிகளையும், நமது சங்கத் தலைவர் பேட்டி காண்பதற்கும், இதர ஏற்பாடுகளைச் செய்வதற்கும் இக்கூட்டம் தன் சம்மதத்தைத்தெரிவித்துக் கொள்ளுகிறது.

N. S. இராமலிங்கம்,
தலைவர்.

தொடர் நாடகம் :

பாவத்தின் நிழல்

—[தாமரைக் கண்ணன்]—

யார்.... யார்...?

மார்த்தாண்டன்	—	மருத நாட்டு மன்னன்
பூபதி	—	மருத நாட்டு ஒற்றன்
தரணி	—	பூபதியின் மனைவி
புவனேசுவரி	—	முல்லை நாட்டு அரசி
மகிபாலர்	—	முல்லை நாட்டு அமைச்சர்

காட்சி 1

காலம் :—*மலைவாயில் மாலைக் கதிரவன்*

இடம் :—*மருதநாட்டு மன்னன் மார்த்தாண்டன் அரண்மனை*

இருப்போர் :—*மன்னன் மார்த்தாண்டன்,*
ஒற்றர் தலைவன் பூபதி.

[*மன்னன் மார்த்தாண்டன் ஆழ்ந்த சிந்தனையுடன் அறையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருக்கிறான். பூபதி, கையில் ஒரு அழகிய பெட்டியுடன் வருகிறான்.*]

பூபதி :—(குழைவுடன்) வணக்கம், மகாராஜா !

மார்த்தாண்டன் :—(பரபரப்புடன்) ஆ... பூபதியா? வந்துவிட்டாயா? வா... வா... நெடுநேரமாக உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். ம்... அது சரி... போன காரியம் என்ன ஆயிற்று?

பூபதி :—அவசரப்படாதீர்கள், அரசே! என் கைகளில் பாருங்கள்.

மார்த்தாண்டன் :—ம்... அழகான தந்தப் பெட்டி!

பூபதி :—இந்தப் பெட்டியின் உள்ளே... (சிரித்து) திறக்கிறேன். நீங்களே பாருங்கள்.

[*பெட்டியைத் திறக்கிறான்.*]

மார்த்தாண்டன் :—ஆ...... தங்கச் சிலை!

பூபதி :—தங்கச் சிலை அல்ல, மகாராஜா! தங்கள் விரோதியின் வயிற்றில் பூனைத்தெழுந்த தளிர்க் கொடி! ஆம்... முல்லை நாட்டு அரசி புவனேஸ்வரியின் கொற்றம் தழைக்க வந்த குலக் கொழுந்து! முல்லை நாட்டின் எதிர்கால இளவரசன்! (மெல்ல) மகாராஜா! தங்கள் கட்டளைப்படி இரவோடு இரவாக இந்தக் குழந்தையை இங்கே கொண்டு வந்திருக்கிறேன்.

மார்த்தாண்டன் :—மகிழ்ச்சி, பூபதி! என் கட்டளையை இவ்வளவு விரைவில் நிறைவேற்றிய உன்னை மனமாரப் பாராட்டுகிறேன்.

பூபதி :—தாங்கள், அமைச்சர்களிடம் காட்டும் அன்பைவிட என்னிடம் அதிக அன்பைக் காட்டுகிறீர்கள்.

மார்த்தாண்டன் :—அதுமட்டும் அல்ல, பூபதி! அவர்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைவிட உன்மீது அதிக நம்பிக்கையும் வைத்திருக்கிறேன்.

பூபதி :—அதனால்தான், என் உயிரையும் துச்சமாக எண்ணி, மாற்றார் பாசறைக்குள் புகுந்து இந்தக் குழந்தையைக் கொண்டு வந்திருக்கிறேன். கொஞ்சம் தவறியிருந்தால்கூடப் போதும், மகாராஜா... காவலர் வேல்பட்டு என் தலையே தரையில் உருண்டு விட்டிருக்கும்.

மார்த்தாண்டன் :—நீ சாதித்துள்ள காரியத்தைச் சரியான நேரத்தில் அருமையான முறையில் எனக்குக் கவனப்படுத்துகிறாய். கெட்டிக்காரன், நீ! ஒரு அமைச்சனுக இருக்கும் அளவுக்கு உனக்குக் கூரிய மதி இருக்கிறது.

பூபதி :—(குழைவுடன்) எது இருந்து என்ன பயன், மகாராஜா! என்னுடைய தலையில் 'நீ என்றும் ஓர் ஒற்றர் தலைவன்' என்றுதானே எழுதப்பட்டிருக்கிறது?

மார்த்தாண்டன் :—(தட்டிக் கொடுத்து) அஞ்சாதே! அந்த எழுத்துக்களை அழித்துவிட்டு 'பூபதி ஓர் படைத்தலைவன்' என்று நான் எழுதுகிறேன்.

பூபதி :—(பெருமையுடன்) சொல்லாதீர்கள், மகாராஜா! அந்தப் பதவியை நினைக்க நினைக்க என் இதயம் மகிழ்ச்சியால் வெடித்து விடும்போல் இருக்கிறது.

மார்த்தாண்டன் :—பூபதி! வஞ்சகத்தால் வரும் பெருஞ் செல்வம் கேவலமானது என்று வஞ்சிக்கத் தெரியாத ஏமாளிகள் சிலர் கூறுகிறார்கள். பார்த்தாயா... வேலின்றி வாளின்றி நான்

செய்த ஒரே ஒரு தந்திரத்தால் முல்லை நாட்டின் மகாராணி புவனேஸ்வரி இந்தப் பூலோகத்திலிருந்தே மறையப் போகிறாள். தான் உயிரையே வைத்திருக்கும் கட்டாணி முத்தைக் காண வில்லையே என்ற ஏக்கத்தால், இந்தக் குழந்தையை இழந்து விட்டோமே என்ற கவலையால், எல்லையில்லாத பிள்ளைப் பாசத்தால் இரவு பகலாக உள்ளம் நைந்து நைந்து செத்து மடியப் போகிறாள். பிறகு, அண்டையில் இருக்கும் முல்லை நாட்டின் மணிமுடி என் சிரசை அலங்கரிக்கும்; பரந்து விரிந்திருக்கும் அந்த நாடு என் காலடியில் கிடக்கும்.

பூபதி :—அந்தக் காட்சியைக் காண நான் பெரிதும் ஆவல் கொள்கிறேன், மகாராஜா! எனக்கு வேறு ஏதாவது வேலை இருந்தால் கொடுங்கள்...!

மார்த்தாண்டன் :—நல்லது, பூபதி! நீ போ. இந்தத் தங்கச்சிலையைக் கொண்டு போய்த் தணலில் இட்டு உருக்கிவிடு!

பூபதி :—(திடுக்கிட்டு) ஆ!... என் கையாலேயே நான் இந்தக் குழந்தையைக் கொல்ல வேண்டுமா?

மார்த்தாண்டன் :—ஆம். நீயே கொன்றுவிடு. பிற்காலத்தில் படைத்தலைவனாக வந்த பிறகு போர்க்களத்தில் ஆயிரம் ஆயிரம் வீரர்களைக் கொல்வதற்காக உன்னை நீ தயார் செய்துகொள்ள வேண்டாமா? அதற்கு இது ஒரு சிறிய ஒத்திகையாக இருக்கட்டும்!

பூபதி :—(முடிவுக்கு வந்தவனாக) சரி, மகாராஜா! அடுத்த கணமே கொன்று விடுகிறேன். அதன் பிறகு...

மார்த்தாண்டன் :—வைர வியாபாரியைப் போல மாறுவேடம் தரித்துக்கொண்டு முல்லை நாடு செல். அரசி புவனேஸ்வரியுடன் இரண்டு நாட்கள் இருந்து பழகு. ஆங்குள்ள படை நிலைமைகளை அறிந்து வா.

பூபதி :—செய்து விடுகிறேன். பிறகு...?

மார்த்தாண்டன் :—மருதநாட்டையும் முல்லைநாட்டையும் இணைத்து பேரரசனாகப் பட்டம் சூட்டிக்கொள்ள நான் இருக்கிறேன். பெருமைக்குரிய படைத்தலைவனாகப் பதவியேற்க நீ இருக்கிறாய்.

பூபதி :—வருகிறேன், மகாராஜா! திட்டத்தை முடித்துக்கொண்டு வெற்றியோடு மீள்கிறேன்.

[பூபதி குழந்தையுடன் செல்கிறான்

மார்த்தாண்டன் :—பூபதி, ஒற்றர் தலைவனாக இருந்தாலும் சாமர்த்தியக்காரன். அவனைக் கையாளாக வைத்துக்கொண்டே முல்லை நாட்டு அரசியை ஒழித்துவிட வேண்டும். அதன் பிறகு.....நான் பேரரசனாகப் பட்டம் சூட்டிக்கொண்ட பிறகு... பூபதியையும் சுலபத்தில் ஒழித்து விடலாம்......

[சிரிக்கிறான்....]

— திரை —

காட்சி 2

காலம் :—முன்னிரவு நேரம்

இடம் :—மருத நாட்டில் ஓர் குடில்.

இருப்போர் :—ஒற்றன் பூபதி, அவன் மனைவி தரணி.

பூபதி :—(வெளியிலிருந்து கதவைத் தட்டும் ஒலி :) தரணி. தரணி...!!

தரணி :—(உள்ளிருந்து) இதோ வந்து விட்டேன்.

பூபதி :—(படபடப்புடன்) சீக்கிரம் கதவைத் திற.

[தரணி, கதவைத் திறக்கிறாள்.]

தரணி :—(திகிலுடன்) உள்ளே வாருங்கள். இரவு நடுச்சாமம் ஆகிறதே. இதுவரை எங்கு சென்றிருந்தீர்கள்?...

பூபதி :—ம்... வந்து...

தரணி :ஆ...! உங்கள் உடல் ஏன் இப்படி நடுங்குகிறது?

பூபதி :—ஒ...ன்...று...மி...ல்...லை! ஒன்றுமில்லை, தரணி!

தரணி :—தெரிகிறது. நீங்கள் செய்யத்தகாத செயல் ஏதோ ஒன்றைச் செய்துவிட்டு இல்லத்திற்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் மனத்தைப் பயம் கவ்விக்கொண்டிருக்கிறது. அதனால் தான் உடம்பு இப்படி நடுங்குகிறது.

பூபதி :—(தடுமாற்றத்துடன்)...ஸ்...தவறாக ஒன்றும் நடந்துவிடவில்லை. நீ அப்பால் போ. எனக்குக் கொஞ்ச நேரம் தனிமை வேண்டும்.

தரணி :—நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள்... நீங்கள் கடத்திக்கொண்டு வந்த அந்தக் குழந்தை யாருடையது? அந்தக் குழந்தையை என்ன செய்தீர்கள்?

பூபதி :—தரணி! நம்மை வாழ வைக்கும் செல்வத்திற்கு நான் ஆசைப்பட்டேன்; அந்த ஆசையே வாழ்வதற்காகப் பிறந்த அந்தப் பச்சிளம் குழந்தையைச் சாக அடித்துவிட்டது.

தரணி :—என்ன சொல்கிறீர்கள்! உங்களுடைய இன்ப துன்பங் களையே என்னுடைய உயிர்நாடியாக எண்ணி வருகிறேன், நான்! என்மீது ஆணையாகச் சொல்லுங்கள். அந்தக் குழந் தையை நீங்கள் கொன்றுவிட்டீர்களா?

பூபதி :—ஆமாம், தரணி! நமது அரசர் என்னைப் படைத் தலைவ னாக ஆக்குவதாக வாக்களித்தார். அதற்கு ஈடாக உலகம் அறியாத அந்தக் குழந்தையைக் கொன்றுவிட்டேன்.

தரணி :—(கலங்கியபடி) கேவலம் பொன்னுக்கும் பொருளுக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டுக்கொண்டு ஒரு உயிரைக் கொன்று விட்டீர்களே...! உங்கள் இதயத்தில் கொஞ்சம்கூட ஈவு, இரக்கம் எதுவுமே இல்லாமல் போய்விட்டதா?

பூபதி :—உஸ்... ஏற்கனவே நான் தடுமாற்றம் அடைந்திருக்கிறேன். நீயும் அழுது என்னை அதிகமாகக் குழப்பி விடாதே. உனக் குத் தெரியாது, தரணி! இந்த உலகத்தில் பொன்னாசையும் பொருளாசையும் யாரையுமே விட்டதில்லை.

தரணி :—(கலக்கத்தினிடையே) போதும், உங்கள் வேதாந்தம். பஞ்சமா பாதகத்திற்கும் அஞ்சாத கொடிய செயலைச் செய்து விட்டு உலகத்தைப் பற்றிப் பேச வந்துவிட்டீர்கள். உங்கள் செயலுக்கு நீங்கள் எத்தனை உதாரணத்தைக் காட்டினாலும், சந்தர்ப்பம் வாய்க்கும்போது உங்கள் மனசாட்சியே உங்களை இடித்துரைக்காமல் போகாது!

பூபதி :—(ஏளனமாக நகைத்து) பைத்தியக்காரி! மனசாட்சியை என்னுள் இருந்து அப்பால் எடுத்தெறிந்து விட்டுத்தான் நான், இந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்தேன்.

தரணி :—அது நடக்காது! மனசாட்சியில்லாமல் எந்த மனிதனும் வாழ முடியாது. மறைந்து விட்டதாக நீங்கள் கற்பனை செய்துகொண்டிருக்கும் அந்த மனசாட்சியே, வாய்ப்பு ஏற் படும்போது உங்கள் இதயத்திலிருந்து விஸ்வரூபம் எடுத்து உங்களைச் சித்திரவதை செய்யும். அப்போது நீங்கள் நிச்சயம் அதற்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும். மனிதன், தன் உயிருக்கு ஆபத்து நேரும்போது நிச்சயம் தன்னைத்தானே உணர்ந்துகொள்வான்.

பூபதி :—(வேகமாக) நீ சொல்பவை விவாதத்திற்கு மட்டும் உதவும் தத்துவங்கள். நான் இழந்துவிட்ட உறுதியை மீண்டும் பெற்று விட்டேன். இதோ பார், தரணி! நான் யாரிடமிருந்து குழந்தையைப் பிரித்தேனோ... அவர்களிடமே... ஆம், முல்லை நாட்டு மகாராணியிடமே இப்போது வைர வியாபாரியாக மாறு வேடம் தரித்துக்கொண்டு போகப் போகிறேன். என் புத்தி

சாதுரியத்தால் நான் அவர்களிடமிருந்து தப்பிப் பிழைத்து மீண்டும் இங்கே வந்தால்...ஆஹா...படைத்தலைவன் பதவி என்னைத் தேடி வரும். ஏராளமான பொன்னும் பொருளும் என்னை நாடி வரும். அந்த எல்லையற்ற செல்வத்தின் முன்னே நான் செய்த பாவம் கரைந்து, இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும்.

தாரணி :—வேண்டாம்! வீண் மனக் கோட்டை கட்டாதீர்கள். எவ்வளவு செல்வம் வந்தாலும், விண்ணும் மண்ணும் நமக்குச் சொந்தமாகிவிட்டாலும் நாம் செய்த பாவம் நம்மைவிட்டு அகலாது. மனிதருக்கு நிழல் உண்டு. நமது உடல் அழிந்து விட்டால் அந்த நிழலும் அழிந்து விடும். ஆனால், பாவத்திற்கு ஓர் நிழல் இருக்கிறது. அந்த நிழலின் நிழல் நம் உடல் அழிந்தாலும் நம்மைவிட்டு அகலாது. அதற்குப் பிறகும், ஆம்...நம் ஆத்மா இந்த உலகில் இருக்கும் வரைக்கும் நாம் செய்த பாவத்தின் நிழல் நம்மைத் தொடர்ந்து வந்துகொண்டே யிருக்கும்.

பூபதி :—(ஆத்திரத்துடன்) தாரணி! நீ என்ன எனக்குத் தத்துவமா போதிக்கிறாய்? நடைமுறை வாழ்வுக்கு உதவாத அந்தத் தத்துவங்களைக் கொண்டு போய்க் குப்பையில் போடு. ஆத்மா வாம... பாவமாம்... நிழலாம்... மனசாட்சியாம்...!! நான் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு வாழத் துணிந்துவிட்டேன். இருந்தாலும் நான் சபல சித்தம் உள்ளவன். ஆகவே, என் மனம் எதற்கும் கலங்காத உறுதியுடன் இருக்கும் இப்போதே என் ஒற்று வேலையைத் துவக்கி விடுகிறேன். இப்போதே வைர வணிகனாக முல்லை நாட்டிற்குச் செல்கிறேன். திரும்பி வர நான்கு நாட்களாகலாம்.

[கதவைத் 'தடார்' என்று சாத்திவிட்டுச் செல்கிறான்.]

தாரணி :—அய்யோ! பேசிக்கொண்டிருக்கும்போதே இவ்வளவு வேகமாகச் சென்றுவிட்டாரே! (விம்மலுடன்) இந்த அழிவுப் பாதை அவரை எங்குக் கொண்டு செல்லுமோ தெரிய வில்லையே...!

[பின்னணியில் விம்மலும் விக்கலும் சேர்ந்த அழுகை இழையோடுகின்றது.]

திரை —

(தொடரும்.)

குறளின் குரல்....!

[மயிலை. முத்தெழிலன்]

குறளின் குரலைக் கேட்டிடுவீர் ;
குறையை நீக்கி வாழ்ந்திடுவீர் !
அறம்பொரு ளின்பப் பாலென்று
அமைத்தார் முறையும் மிகநன்று.

எழுத்திற் கெல்லாம் 'அ'முதலாம்,
இறைவன் உலகிற் கதுபோலாம்,
எழுத்தும் எண்ணுங் கண்ணிரண்டாம் ;
இனிதாய்க் கற்றால் நலனுண்டாம் !

குற்றம் போக்கிப் படித்திடுவீர்,
குணத்திற் சிறந்து விளங்கிடுவீர் !
கற்கத் தகுந்தவை கற்றிடுவீர் :
காசினி போற்ற வாழ்ந்திடுவீர் !

உடலின் அழுக்கை நீர்நீக்கும் ;
உள்ளத் தூய்மை சொல்காக்கும்.
அடக்கம் உயர்வைத் தந்திடுமே ;
அடங்கா மைத்துய ரளித்திடுமே !

இத்தகு நல்லுரை தருநூலாம் ;
இனிமை பயக்கும் முப்பாலாம்,
வித்தகர் நெறியிற் சென்றிடுவீர் ;
விழுமிய முறையில் வாழ்ந்திடுவீர் !

ஆசிரியர்களைப் பற்றி விநோபா

தற்கால ஆசிரியர்களின் தாழ் நிலைக்கு என்ன காரணம்? அவர்கள் தாங்களாகவே தங்கள் தரத்தைக் குறைத்துக் கொண்டார்கள். மற்றவர்களாலும் குறைக்கப்பட்டார்கள். இன்று ஆசிரியர்கள் வேலைக்காரர்களைப்போலக் கருதப்படுகிறார்கள்.

வயலில் வேலை செய்யும் வேலையாட்களுக்குக் குறிப்பிட்ட வேலைகள் கொடுக்கப்படுகின்றன. இதர பொறுப்பான வேலைகளை மற்றவர்கள் செய்கிறார்கள். ஆசிரியர்கள் நிலையும் இத்தகையதே. பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு எத்தகைய கல்வி கொடுப்பது, எம்முறையில் கற்பிப்பது என்பதைப்பற்றி மேலதிகாரிகளே நிர்ணயிக்கின்றனர்.

கல்வியின் அடிப்படையான இந்த விஷயத்தைத் தீர்மானிப்பதில் ஆசிரியர்க்கு எந்தப் பங்குமில்லை. பாட புத்தகங்களை நிர்ணயிக்கும் உரிமையும் ஆசிரியர்களுக்கு இல்லை. ஆசிரியர்களுக்கு வேறு வேலைதான் என்ன? நிர்ணயிக்கப்பட்ட பாடப் புத்தகத்தைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது ஒன்றே அவர்களுடைய வேலை.

கணித ஆசிரியர் கணித பாடத்தையும், பூகோள ஆசிரியர் பூகோள பாடத்தையும் தவிர, வேறு எதையும் கற்பிக்க அவர்களுக்குத் தெரியாது. ஏனெனில் அவர் சமூக ஆசிரியராகவோ, வாழ்க்கை ஆசிரியராகவோ இல்லாததே. முன்பெல்லாம் நாலைந்து பாடங்களுக்கு ஒரே ஆசிரியர் இருப்பார். இன்றோ ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு தனி ஆசிரியர் இருக்கிறார். இந்தக் குறிப்பிட்ட பாடத்திற்கு நாலைந்து வகுப்புகளுக்கு அவரே சென்று போதிப்பார். இதன் காரணமாக அவர் குறிப்பிட்ட விஷயத்தை மட்டுமே தெரிந்து கொண்டு அதை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பார்.

ஆனால், வாழ்க்கைக்கான கல்வி எதையும் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பவராக அவர் இருக்கமாட்டார். "ஸ்டேஷன் எங்கே இருக்கிறது?" என்றால் "எனக்குத் தெரியாது பூகோள ஆசிரியரைக் கேளு," என்பார். இவ்வாறு ஆசிரியர்களின் நிலை கூலிக்காரருடையது போலிருக்கிறது.

ஆசிரியர் வேலைக்காரர்களைப் போல் ஆகிவிட்டதால் ஆசிரியர்களின் மதிப்புக் குறைந்துவிட்டது. அவர்களுக்கு மூளைச் சுதந்திரம் — அதாவது சுயமாகச் சிந்திக்கும் சுதந்திரம் — இல்லை. வயலுக்குக் காளைமாடுகளை ஓட்டிச் செல்லும் விவசாயி காளைகளிடம் விவசாயத்தைப்பற்றி

யோசனை கேட்பதில்லை. காளைகளின் உழைப்பு மட்டுமே அவனுக்குத் தேவை. காளைகளின் ஆலோசனை அவனுக்குத் தேவையில்லை.

ஆசிரியர்களின் நிலையும் இத்தகையதே. பிள்ளைகளுக்கு எத்தகைய கல்வி கொடுக்கப்படலாம் என்பதைப்பற்றி ஆசிரியர்களின் அபிப்பிராயம் கேட்கப்படுவதே யில்லை. அரசாங்கம் வகுத்த கல்வித் திட்டத்தை அமல் நடத்த மட்டுமே ஆசிரியர்களின் உதவி நாடப்படுகிறது. தாங்கள் வேலைக்காரர்களாக, கூலிக்காரர்களாக நடத்தப்படுவதைப்பற்றி ஆசிரியர்களுக்குக் கவலையில்லை. தங்கள் சம்பளம் இன்னும் சற்று அதிகரிக்கப்படவில்லையே என்பது தான் அவர்கள் குறை.

காளை மாட்டிற்கும் இத்தகைய குறைதான். போதிய தீனி கொடுக்கப்பட வில்லையே என்று அது குறைப்படுகிறதே யொழிய, விவசாயத்தைப்பற்றித் தன்னிடம் ஆலோசனை கேட்கவில்லையே என்று அது குறைப்படுகிறதா?

(நாடோடி தொகுத்த வினோபாவின் பொன் மொழிகளிலிருந்து எடுக்கப்பட்டது. பக்கங்கள் 68—லிருந்து 70-வரை. பிரசுரம் காமதேனு பப்ளிகேஷன்ஸ், சென்னை—20)

—(பாலர் கல்வி–நவம்பர் 61)

"ஆரம்பக்கல்வி" ஆபீஸ்.

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ஜனாதிபதி பரிசு பெற்ற ஆசிரியர்

திரு. இராஜவேலு

வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருமால்பேறு என்ற சிற்றூர் காஞ்சிபுரத்துக்கு மேற்கே சுமார் 8 கல் தூரத்தில் உள்ளது. அவ்வூரில் இவ்வாண்டு தமிழகத்தின் தலைசிறந்த ஆசிரியர் மூவருள் ஒருவராய்த் தமிழ் நாட்டு அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு நம் பாரத நாட்டு ஜனாதிபதியின் பரிசையும் பெற்று விளங்கும் நம் மதிப்பிற்குரிய ஆசிரியர் உயர்திரு. **இராசவேலு முதலியார்** அவர்கள் 28–9–1906–ல் திரு. இராமசாமி முதலியாருக்கும் திருமதி ஜானகி அம்மையாருக்கும் திருமகனாய்த் தோன்றினார்.

இளமையில் சென்னைக்கு அடுத்த ஆலந்தூரில் வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் மூன்றாம் படிவம் வரை படித்தார். பின்னர் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து பள்ளி யிறுதி வகுப்புவரை படித்துப் பலரும் புகழும் வண்ணம் வெற்றிபெற்றார். அடுத்துச் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இரண்டாண்டுகள் உயர் கல்வி பயின்றார்.

அக்காலத்தே குடும்பப் பொறுப்பைத் தானே ஏற்க நேரிட்டது. ஆகவே தனக்கு நெய்யுந் தொழிலில் போதிய அனுபவம் இருப்பதைக்கொண்டு சென்னை அரசினர் நெசவுப் பயிற்சிப் பள்ளியில் ஈராண்டுகள் நெசவுப் பயிற்சி பெற்றார். பின்னர் மேல் விஷாரத்தில் இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளியில் இரண்டு ஆண்டுகள் நெசவு ஆசிரியராக வேலை செய்தார். பின்னர் 1933–34 ஆண்டில் சென்னை கைத் தொழில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து ஒன்பது மாதங்கள் பயின்று, பயிற்சி பெற்ற ஆசிரியராக 1934–ம் ஆண்டு, இன்று தமிழ் நாட்டின் தலைசிறந்த பள்ளியாக விளங்கும் வாலாஜாபாத் 'இந்து மத பாடசாலையில்' ஆசிரிய வாழ்க்கையைத் தொடங்கினார்.

அவர் நெய்யுந் தொழிலில் பயிற்சி பெற்றவர். பிளாஸ்டிக்கில் எழுத்துக்கள் அறுத்து பெயர்ப் பலகைகள் செய்வதிலும், மற்றும் Fret Work-யிலும் நல்ல பயிற்சி பெற்றவர். மற்றும் சாரணர், குருளையர் பயிற்சி பெற்றவர் புகைப்படத் தொழிலையும் அவர் நன்கு கற்றிருக்கிறார்.

அன்று முதல் 1916–ல் தொடங்கி தமிழ்நாட்டிலேயே ஒப்புயர்வற்ற பாடசாலையாகத் திகழ்ந்து வரும் வாலாஜாபாத் இந்து மத பாடசாலையில் இருபத்தைந்து ஆண்டுகளாக ஆசிரிய

ராகவும், தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றார். பொத்தான் செய்தல், தச்சு வேலை, அலுமினியப் பாத்திரங்கள் செய்தல், பொம்மைகள் அறுத்தல், நெய்தல், பிளாஸ்டிக் பெயர்ப் பலகை செய்தல், தையல் முதலிய சிறு தொழில்களில் மாணவர்களுக்குப் பயிற்சி யளிக்க இந்து மக பாடசாலையின் சார்பில் அமைந்துள்ள திருவள்ளுவர் தொழிற்சாலையின் மேற்பார்வையாளராக இருந்து வருகின்றார். பாடசாலையில் அமைந்துள்ள சாரணர் குழு, குருளையர் கூட்டம் செஞ்சிலுவைச் சங்கம், வீமன் விளையாட்டு வெற்றிப்படை, நாடக மன்றம் முதலிய அமைப்புக்கள் அனைத்திலும் பங்கு கொண்டு அவைகளைத் திறம்பட இயக்கி வருகிறார். பாடசாலையின் சுவர்கள் அனைத்தும் மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய அளவில் படங்கள், பொது விவரங்கள், முதலிய அனைத்தும் எழுதுவதற்குக் காரணராக இருந்தவர் இவரே. மற்றும் பாடசாலையின் சார்பில் நடைபெறும் வள்ளலார் மாணவர் இல்லத்தில் தங்கியுள்ள எண்ணூறு மாணவர்கள் முன்னேற்றத்திலும் சிறப்பாக அங்குள்ள முந்நூற்றுக்கு மேற்பட்ட பழந்தமிழ்ச் சிறுவர்களின் கல்வியிலும் ஆர்வம் கொண்டு உழைத்து வருகிறார். முடிவாக, பள்ளியின் வருவாயைக் கருதி இன்சூரன்ஸ் கம்பெனியில் ஏஜண்டாக இருந்து வரும் செயலாளர் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றார்.

ஆகவே இந்நல்லாசிரியரைப் பாராட்டி நம் பாரத நாட்டு அரசாங்கம் 30-10-1961-ல் ஜனாதிபதி பரிசு அளித்து கௌரவித்தது பெரு மகிழ்ச்சிக்கு உரிய செய்தியாகும்.

உங்களுக்குத் தெரியுமா ?

செயற்கை ரப்பர் எவ்வாறு கிடைக்கிறது ?

நிலக்கரியுடன் சுண்ணும்பைக் கலந்து சுடவைத்தால் அதிலிருந்து 'கால்ஷியம் கார்பைட்' என்னும் பொருளில் நீரைச் சேர்க்க 'அஸிடெலின்காஸ்' என்னும் ஒருவகை வாயு உண்டாகிறது. அத்துடன் 'ஹைட்ரோ க்ளோரிக்' அமிலத்தைச் சேர்த்து செயற்கை ரப்பர் தயார் செய்யலாம். இத்தகைய செயற்கை ரப்பர் இயற்கை ரப்பரைவிடப் பல வகையிலும் சிறந்ததாக இருக்கிறது.

— போதனு விஷயப் பூங்கொத்து.

3-வது வகுப்பிலிருந்தே ஆங்கிலப் போதனை தொடங்க வேண்டும்

தென் மாநிலக் கல்வி மந்திரிகள் மாநாடு ஆதரவு

3வது ஸ்டாண்டர்டிலிருந்து ஆங்கிலம் போதிப்பதை அண்மையில் கூடிய சென்னை, மைசூர், கேரளா, ஆந்திர பிரதேசம் ஆகிய ராஜ்யங்களின் கல்வி மந்திரிகள் மாநாடு ஆதரவளித்தது. இதற்காகப் பொதுவான பாட திட்டம் வகுக்கவும் அது யோசனை கூறியது.

3வது திட்ட இறுதிக்குள் லட்சியத்தை எய்த தங்கள் ராஜ்யங்களில் கிடைக்கும் ஆசிரியர் முதலிய வசதிகளுக்கு ஏற்ப படிப்படியாகத் திட்டம் வகுப்பதைத் தனிப்பட்ட ராஜ்யங்களின் முடிவுக்கு மாநாடு விட்டுவிட்டது.

பொதுவான விளக்கங்களுடன் கூடிய பாடத் திட்டங்களை ஒருமுகப் படுத்தப் பொதுவாக நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்க பங்களூரில் கூறிய நான்கு ராஜ்ய கல்வி மந்திரிகள் மாநாட்டில் நிறுவப்பட்ட கல்வி இலாகா டைரக்டர்கள், காரியதரிசிகள் கமிட்டி செய்த சிபார்சுகளை இம்மாநாடு ஆலோசித்தது. நான்கு ராஜ்யங்களுக்கும் பொதுப் படையான கல்விப் பிரச்னைகளை மாநாடு விவாதித்தது.

பாட திட்டம் தயாரிப்பது, பாடபுத்தகங்களுக்கான விஷயங்களைத் தயாரிப்பது, அவற்றை அப்போதைக்கப்போது மதிப்பிடுவது, ஆரம்ப வகுப்பு மாணவர்களின் தரத்தை மதிப்பிடுவது ஆகியவற்றுக்காகப் பிரதேச ஆராய்ச்சி இலாகா ஒன்றை நிறுவ வேண்டுமென்று மாநாடு கருத்து தெரிவித்தது. இதற்கான அமைப்பு விதிகளைத் தயாரிக்க நான்கு ராஜ்ய கல்வி இலாகா டைரக்டர்கள் கொண்ட கமிட்டியை நியமிக்க வேண்டுமென்றும் மாநாடு கருதியது. அடுத்த ஜனவரி இறுதிக்குள் இவ் விலாகாவை நிறுவவேண்டும். கல்வி இலாகா டைரக்டர் கமிட்டியரின் கன்வினராகச் செயலாற்ற வேண்டும்.

பாட திட்டங்கள், பொது விஞ்ஞானம், கணிதப்பாட புத்தகங்கள் இவற்றை ஒரு தரப்படுத்தவும் பிரதேச ஆராய்ச்சி இலாகா யோசிக்க வேண்டுமென்று கூறப்பட்டது. ஒவ்வொரு பாடத்திலும் பொது பாட திட்டம் வகுக்கவும் தரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் நூல்களைத் தயாரிக்கவும் நிபுணர் கமிட்டியொன்றை இவ்விலாகா நிறுவ வேண்டும். இப் பாடங்களில் பொதுவான பாட புத்தகங்கள் பாட திட்டங்கள் இருக்கும்.

• மொழி பாடபுத்தகங்களை தயாரிக்கும் முறை, பல்வேறு தாய் மொழிகளைப் போதிக்க ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் நூல்கள் இவற்றில் பிரதேச ஆராய்ச்சி இலாகா ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்றும் மாநாடு கருதியது.

7வது ஸ்டாண்டர்டுக்குக் கீழ் பொதுப் பரீட்சை நடத்தக்கூடாதென்றும் ஒவ்வொரு பள்ளியும் தனிப்பட்ட யூனிட்டாக கருதப்பட வேண்டுமென்றும் கல்வி இலாகா காரியதரிசிகள், கல்வி இலாகா டைரக்டர்கள் கமிட்டி செய்த சிபார்சுகளை மாநாடு ஊர்ஜிதம் செய்தது.

உணர்ச்சி பூர்வமாக மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க ஒவ்வொரு ராஜ்ய பிரதேச மொழியிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளைப் பிரஸ்தாபிக்கும் பாடல்களைத் தயாரிக்க வேண்டுமென்றும் மாநாடு கருதியது. இப்பாடல்களை ஆரம்ப வகுப்பு மாணவர்கள் சேர்ந்து பாட உபயோகிக்கலாம். ஆரம்பப் பள்ளிகளில் சேர்ந்து பாடுவதைக் கட்டாயமாக்க வேண்டும்.

தற்போதைய திருத்தி அமைக்கப்பட்ட செகண்டரி கல்வி முறையை அமுல் நடத்துவதில் ஏற்படும் கஷ்டங்கள், பல நோக்க வகுப்புகளை புகுமுக வகுப்புகளை நீக்குதல் ஆகிய விஷயங்கள் குறித்து மாநாடு யோசித்தது. ஹையர் செகண்டரி வகுப்புகள் முறையை அடியோடு பரிசீலிக்க நிபுணர் கமிட்டியொன்றை நியமிக்க வேண்டுமென்று மகாநாடு முடிவு செய்தது. இவ்விஷயத்தை இந்திய சர்க்கார், மத்திய கல்வி ஆலோசனை போர்டுக்குத் தெரிவிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

ஆரம்ப வகுப்புகளில் பிரதேச மொழிகளுக்குப் பொதுப்படையான பாட திட்டம்கூடாதென்றும் ஏனெனில் இவ்வகுப்புகளில் மாணவர்கள் ஒரு மொழியின் அமைப்பு, அதன் எழுத்துக்களையே கற்கின்றனர் என்றும் மகாநாடு கருதியது. குறிப்பிட்ட கட்டங்களில் ஒற்றுமையை வளர்க்கும் பாடங்களை சேர்க்க வேண்டுமென்றும் மாநாடு அபிப்பிராயப்பட்டது.

இம்மாநாட்டில் சென்னை கல்வி மந்திரி திரு. ஸி. சுப்பிரமணியம் கலந்து கொண்டார்.

சென்னை மாவட்ட உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

இச்சங்கத்தின் கூட்டம் 6—11—61 தேதி மாலை திரு. A. R. சேஷாசலம் அவர்கள் தலைமையில் கூடியது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

(1) உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளுக்குப் போதுமான அளவு 20 சதவீதம் நிர்வாக கிராண்டு அரசாங்கத்தாரால் கொடுக்கப்படாமையாலும், ஆசிரியர் சம்பளம் உயர்த்தப்பட்டதால் அந்த அளவுக்கு நிர்வாகிகள் ஆசிரியர்களுக்காக பிராவிடண்ட் நிதிக்கு ரூபாய்க்கு 0–03 ந பை வீதம் கொடுக்க முடியாத நிலையில் பல பள்ளிகள் இருந்து வருகின்றன. அத்தகைய P. F. கட்ட முடியாத பாடசாலை நிர்வாகிகளைக் கல்வி அதிகாரிகள் வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறது.

(2) தற்போது லேபர் பாடசாலைகளுக்குப் பகல் உணவு அளிக்க ஒரு பிள்ளைக்கு 15 ந.பை. வீதம் அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டு வருகிறது. அம்மாதிரி உதவிபெறும் பாடசாலைகளுக்கும் குறைந்தது ஒரு பிள்ளைக்கு 12 ந.பை. வீதம் கொடுக்கும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

ரூ. 400 வரை சம்பளம் பெறுவோர் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை

தல நிர்வாகத் துறை ஊழியர்கள், அரசாங்க உதவி பெற்ற ஆரம்ப, உயர்தரப் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் குழந்தைகள், கல்விச் சலுகை பெற பெற்றோரின் மாதச் சம்பளம் ரூ. 300 (பஞ்சப் படி முதலியன நீங்கலாக) ஆக இருக்கவேண்டும் என்று முன்னால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது மேறபடி ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகரித்துள்ளதன் காரணமாக மாதச் சம்பளம் ரூ. 400 உள்ளவர்களின் குழந்தைகளுக்கு, 1960 ஜூன் 1ம் தேதியிலிருந்து கல்விச் சலுகை உண்டு என்று அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது. மாதச் சம்பளம் ரூ. 300 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தபோது கல்விச் சலுகை பெற்ற எல்லாருக்கும் இப்புதிய ஏற்பாட்டின்படி கல்விச் சலுகை உண்டு.

தமிழ் நாடு உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் மாநாடு

5-11-1961 ல் திருத்துறைபூண்டியில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட உதவிபெறும் நிர்வாகிகள் விசேஷ கூட்டத்தில் வருகிற 1961 டிசம்பர் மாதத்தில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நிர்வாகிகள் மாநாடு கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய மாநாடு கூட்ட முன்வந்த தஞ்சை மாவட்ட நிர்வாகிகள் சீக்கிரத்தில் இம் மாநாட்டைக் கூட்டிவைக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். இது சம்பந்தமான கடிதப் போக்குவரத்துக்கள் எல்லாம் திரு. ரங்கசாமி அய்யங்கார், நிர்வாகி, உயர்தர ஆரம்பப் பள்ளி, செம்போடை போஸ்டு, வேதாரண்யம் தாலுக்கா, தஞ்சாவூர் ஜில்லா என்ற விலாசத்திற்கு எழுதும்படி மாநாட்டில் கலந்து கொள்ள விருப்பமுள்ள நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இந்த மாநாடு மிக முக்கியமானது. தேர்தல் நெருங்கிவரும் இச்சமயத்தில் எல்லாக் கட்சியை சேர்ந்த M. L. A.-க்களை இம் மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்து நமது குறைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டியது நமது கடமை. உடனடியாக நிர்வாகிகள் மாநாட்டில் தொடர்பு கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

P. வீரராகவன்,

தலைவர்,

தமிழ்நாடு உதவிபெறும் துவக்கப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்

உங்களுக்குத் தெரியுமா ?

கார்க் (Cork) எப்படிக் கிடைக்கிறது ?

'கார்க் மரம்' என்னும் ஒருவகை மரத்தின் பட்டைகளை உரித்துத்தான் பல அளவுகள் உள்ள 'கார்க்'குகள் தயாரிக்கப்படுகின்றன. பத்துப் பதினொரு ஆண்டுகளுக்கு ஒரு முறை இவ்வகை மரங்களின் பட்டைகளை உரித்து எடுக்கிறார்கள். இந்தப் பட்டைகளையே பல ரகங்களில் அறுத்து, வேண்டிய அளவுள்ள 'கார்க்'குகளாகத் தயாரிக்கின்றனர். இந்தக் 'கார்க்' மரங்கள் சுமார் 150 ஆண்டுகள்வரை உயிர் வாழக் கூடியவை.

—போதனா விஷயப் பூங்கொத்து

ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக்கும் ஒரு டாக்டர், ஒரு நர்ஸ்

இரஷ்யாவில் உள்ள நிலைமையை விவரிக்கிறார் கல்வி இயக்குநர்

அங்கு 70% ஆசிரியர்கள் பெண்கள்

ரஷ்யாவில் 70 சதவிகித ஆசிரியர்கள் பெண்கள். கல்விக்காக அந் நாட்டில் கொள்ளைப் பணம் செலவழிக்கிறார்கள். 700 குழந்தைகள் உள்ள பள்ளிக் கூடத்திற்கு 70 ஆசிரியர்கள் வேலை பார்க்கிறார்கள். டாக்டருக்குள்ள சம்பளம் ஆசிரியருக்குக் கிடைக்கிறது. ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக் கூடத்துக்கும் ஒரு டாக்டரும், பயிற்சி பெற்ற ஒரு நர்ஸும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பள்ளிக் குழந்தைகள் தேக ஆரோக்கியத்துடன் சந்தோஷமாக இருக்கின்றன.

இவ்விவரங்களை கல்வி இலாகா டைரக்டர் திரு. என். டி. சுந்தரவடிவேலு அண்மையில் சென்னை வெஸ்லி ஹைஸ்கூலில் தலைமை ஆசிரியர்கள் சங்க ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கல்லூரி மற்றும் மேல் பட்டப் படிப்புவரை எல்லா கட்டங்களிலும் அந்நாட்டில் கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது. எட்டாவது ஸ்டாண்டர்டு வரை கட்டாயக் கல்வி அமுலிலுள்ளது. 1962ம் ஆண்டு முதல் 11 வது வகுப்புவரை அதை விஸ்தரிக்க முடிவு செய்துள்ளனர் என்றும் சமீபத்தில் ரஷ்யா சென்று திரும்பிய அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்: மாணவர்களில் சுமார் 85 சதவிகிதத்தினர் அவர்களுக்கு வேண்டிய புத்தகங்களை சுயமாகவே வாங்கிக் கொள்கிறார்கள். ரஷ்யாவில் எவருமே வேலையில்லாமல் இல்லை. ஆனால் நிறையக் குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு அரசாங்கம் பள்ளிப் புத்தகங்களை வாங்க உதவி புரிகிறது.

நான்காவது பாரம் அல்லது எட்டாவது ஸ்டாண்டர்டு தேறியவர்கள் நான்கு அல்லது ஐந்து ஆண்டு ஆசிரியர் பயிற்சி பெற்ற பிறகு ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். 1965ம் ஆண்டிலிருந்து அங்கு 11வது ஸ்டாண்டர்டு தேறியவர்கள் மட்டுமே ஹைஸ்கூலில் ஆசிரியர் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். வேலைக்கு அமர்த்தப்படுமுன் 5 ஆண்டு பயிற்சியும் அவர்கள் பெற வேண்டும்.

ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள் சென்னையைப் போல் ரஷ்யாவி லும் உள்ளன. அந்நாட்டில் அத் தகைய பள்ளிகளின் எண் ணிக்கை 26000. ஒரு பகுதியில் 10 குழந்தைகள் பள்ளிக்கூடம் சேரத் தயாராக இருந்தால் உடனே அங்கு ஓராசிரியர் பள்ளியொன்றை அரசாங்கம் ஆரம்பித்து விடுகிறது.

ஒவ்வொரு குழந்தையும் அங்கு முதல் வகுப்பிலிருந்து நடைமுறைப் பயிற்சிமூலம் ஏதா வது ஒரு தொழில் கல்வியை கற் றாக வேண்டும். மேலும் ஒவ் வொரு குழந்தையும் மூன்று மொழிகளைக் கற்றாகவேண்டும். முதல்வகுப்பிலிருந்து பிராந்திய தாய்மொழியுட்பட, மூன்றும் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. பிறகு அக்கட்டத்திலிருந்து மூன்று மொழிகளும் கட்டாய மாகும். ஆங்கிலமொழி கற்பவர் எண்ணிக்கை மேன்மேலும் பெருகிவருகிறது, 45 சதவிகிதத் தினர் ஆங்கிலமும், 35 சதவிகிதத் தினர் ஜெர்மன் மொழியும், 20 சதவிகிதத்தினர் பிரெஞ்சும் கற்று வருகிறார்கள். மூன்று மொழிகள் படித்தாலும் சர்வ கலாசாலையில் நுழைவதற்கு இரண்டு மொழிகளில் தேறினல் போதும். அவற்றில் ஒன்று அந் நிய மொழியாக இருக்கவேண் டும். அந்த முறையைத்தான் சென்னைப் பல்கலைக் கழகமும் கைக்கொண்டிருக்கிறது.

ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளிக்க வகுப்புகள் நடத்தப்படு கின்றன. அவற்றில் தேறும் ஆசி ரியர்களுக்கு ஐந்து ஆண்டுக ளுக்கு ஒரு முறை சம்பள உயர்வு தரப்படுகிறது.

திரு. குருவில்லா ஜாகப் ஆரம் பத்தில் அனைவரையும் வரவேற்று பேசினர்.

உங்களுக்குத் தெரியுமா ?

நம்முடைய நகங்களில் வெள்ளைப் பூக்கள் போன்ற புள்ளி கள் ஏற்படக் காரணமென்ன ?

இவ்வாறு உண்டாவதற்கு, வானில் பறக்கும் வெள்ளைக் கொக்கு களைப் பார்த்துக் கைகொட்டினல் நகத்தில் வெள்ளைப் பூக்கள் உண் டாகும் என்றும், நகத்தில் எத்தனைப் பூக்கள் இருக்கின்றனவோ அத்தனைக்கும் புத்தாடைகள் அவனுககுச் சேரும் என்றும் ஒரு நம்பிக்கை நம்மவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனல் அம்மாதிரிக் காரணங்களுக்காக நகத்தில் வெள்ளைப் பூக்கள் தோன் றுவதில்லை. நம் தேகத்திலுள்ள சக்திக் குறைவிஞலேயே ஏற்படு கின்றன. நல்ல சுத்தமான இரத்த ஓட்டம் இல்லை என்பதையே அது குறிக்கிறது.

—போதனு விஷயப் பூங்கொத்து

புரட்சிக் கவிஞர்

வால்ட் விட்மன்

"அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர் விட்மன். அவர் எழுத்தில் நான் அமெரிக்காவை அதிகமாக அறிகிறேன்; அமெரிக்காவின் உயிர் நாடி இன்னதென்று உணர்கிறேன். அமெரிக்க நாட்டின் மாபெரும் குரல் அவரே—இவ்வகையில் அந் நாட்டிற்கு அவரைப் போன்ற ஒருவர் வேறு யாரும் இதுவரை வாய்த்ததில்லை."— இவ்வாறு கூறியிருக்கிறார் ரவீந்திரநாத் தாகூர்.

பெரும்பாலான அமெரிக்கர் கருத்தும் இதுவே. மக்கள் ஆட்சியிலும், மனித மாண்பிலும் விட்மனுக்கு இருந்த பெரிய நம்பிக்கையும், அவரது நோக்கின் பரப்பும் ஆற்றலும், அவருடைய பாடல்களின் அழகும் மிகப் பெரிய அமெரிக்கக் கவிஞர்களின் ஒருவராக அவரை ஆக்கிவிட்டன.

நியூயார்க்கில், லாங் ஐலண்டிலுள்ள ஹட்டிங்டனுக்கு அருகேயுள்ள ஒரு பண்ணையில் 1819 மே 31ல் விட்மன் பிறந்தார். தொழிலாளர் சமுதாயத்தைச் சேர்ந்த கல்வி அறிவில்லாத வன்மை மிக்க மக்களுக்கு இடையே அவரது இளமைக் காலம் கழிந்தது. 1823ல் அவரது குடும்பத்தினர் புரூக்லின் நகருக்குப் போய்க் குடியேறினார்கள். அவரது தந்தை தச்சு வேலை செய்தார்; 12 வயது வரை விட்மன் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றார். அதன்பின் ஒரு பத்திரிகை நிலையத்தில் அச்சு வேலை பழகினார். எழுத்தில் அவருக்கு ஆர்வம் பிறந்தது.

அடிமை முறையை எதிர்த்தார்

புதிய அனுபவங்கள் பெற வேண்டும் என்பது அவரது விருப்பம். ஆதலால், வாழ்க்கைத் தொடக்கம் முதல் அவர் ஓரே இடத்தில் நெடுங்காலம் இருப்பதில்லை. பள்ளி ஆசிரியராகவும், அச்சுக் கோப்பவராகவும், பத்திரிகை நிருபராகவும் அவர் வேலை செய்திருக்கிறார். சிறிது காலம் அவர் 'ஈகிள்" என்னும் புரூக்லின் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். புதிய மாநிலங்களில் அடிமை முறையைப் புகுத்துவதை அவர் எதிர்த்ததால் அவ் வேலையினின்று நீக்கப்பட்டார்.

இடைக்கிடையே அவர் தாம் பார்த்த வேலைகளினின்று விலகி லாங் ஐலண்டு கடற்கரையில் அலைந்து திரிவார்; படகில் செல்வார்; நீந்துவார்; விவசாயிகளோடும் செம்படவரோடும் பேசுவார். சாதாரண மக்களைப் பற்றி அறிய வேண்டுமென்பது அவர்

விருப்பம். நெடுந் தொலை நடந்து சென்றதால், பல்வகை இனத்தவரும் மதத்தவரும், நிறத்தவரும் வாழும் வாழ்க்கையை அவர் நன்கு அறிந்துகொண்டார்.

17 ஆண்டு லாங் ஐலண்டு, நியூயார்க் வட்டாரங்களில் அவர் சுற்றித் திரிந்தார். அக் காலத்தில் புத்தகங்களை அதிகமாகப் படித்தார். கிறிஸ்தவத் திருமறையை மனப்பாடம் செய்தார்; வால்ட்டர் ஸ்காட், ரால்ப் வால்டோ எமர்ஸன், வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதியவற்றையும், ஐரோப்பாவின் இலக்கியங்கள், கீழ் நாடுகளின் இலக்கியங்கள் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புகளையும் அவர் படித்தார்.

அக் காலத்தில்தான் "புல்லின் இதழ்கள்" என்னும் நூலை அவர் உருவாக்கினார். 1855ல் அது வெளியிடப்பட்டது. இளமை முதல் முதுமை வரை அமெரிக்க மக்களின் வாழ்க்கை அதில் வருணிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க மக்களின் இன்பமும் துன்பமும், வேலையும், விளையாட்டும், விருப்பும் வெறுப்பும் அதில் காணக்கிடக்கின்றன. அமெரிக்காவின் சமவெளிகள், பண்ணைகள், ஆறுகள், நகரங்கள் ஆகியவற்றைத் தமது அநுபவத்தின் மூலம் அவர் எடுத்துரைத்துள்ளார்.

நாடே ஒரு கவிதை

95 பக்கங்கள் கொண்ட சிறு நூல் "புல்லின் இதழ்கள்." அதில் 12 பக்கங்களில் அவர் சிறப்பு மிக்க முகவுரை ஒன்று எழுதியுள்ளார். "அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்களே மிகச் சிறந்த கவிதையாகத் திகழ்கின்றன. மக்கள் அனைவருக்குள்ளும் பொதுவான நல்லெண்ணமும், உலக ஒற்றுமையும் உருவாக்குவதே அமெரிக்கா என்பது தோன்றி இருப்பதின் முக்கிய காரணம்" என்னும் பொன்மொழிகளை அதில் காணலாம்.

மற்றக் கவிஞர்கள் கடைப்பிடித்த இயைபு, அசை, சீர் முதலியவற்றை யெல்லாம் அவர் புறக்கணித்தார்; கிறிஸ்தவத் திருமறையின் இன்னோசை நடையைத் தழுவி அவர் எழுதினார். எனவே, முற்றிலும் புதிதான தேசிய நடை ஒன்றை அவர் உருவாக்கினார்.

"புல்லின் இதழ்கள்" என்னும் நூலில் 800 பிரதிகள் அச்சிடப்பட்டன. இரண்டு, மூன்று டஜன்களுக்குமேல் அந் நூல் விற்பனை ஆகவில்லை. அது கட்டுப்பாட்டுக்கு உட்படாத தென்றும், கடவுள் பக்திக்குமுரணானதென்றும், கொச்சை மொழி மலிந்ததென்றும் விமர்சகர்கள் எழுதினார்கள். எனினும், எமர்ஸன், தோரோ முதலிய எழுத்தாளர் சிலர் விட்மனின் மேதைத் தன்மையை உணரலானார்கள்.

கீழை நாடுகளின் கருத்து

அதில் கீழை நாடுகளின் கருத்து உள்ளதென்று தோரோ

கண்டார். வேதாந்தக் கருத்துக்களை அதில் காணலாம்.

விட்மனின் இளமைக் காலத்தில் அமெரிக்காவில் முக்கியமாக நியூ இங்கிலாந்தில் இந்து மதக் கருத்துக்கள் பரவி வந்தன. பகவத்கீதை மொழி பெயர்ப்பு தம்மைக் கவர்ந்துள்ளதாக விட்மன் தமது நாட் குறிப்பில் குறித்துள்ளார். இந்தியாவைப் பற்றி, "இந்தியாவுக்கு வழி" என்னும் கவிதை எழுதியவர் அவர். எனினும் இந்திய இலக்கியங்கள் பயின்றது பற்றிய அவரது குறிப்புக்கள் ஒன்றுக்கொன்றுமுரணாக உள்ளன.

மீண்டும் மீண்டும் தம் கவிகளைத் திருத்தி விட்மன் புதிய பதிப்புக்கள் வெளியிட்டார். முதல் பதிப்பில் 12 கவிதைகள் இருந்தன; எட்டாவது பதிப்பில் 400 கவிதைகள் சேர்ந்தன. அமெரிக்காவிலும் வெளி நாடுகளிலும் அந்நூலுக்கு மதிப்பு ஏற்படுவதாயிற்று.

1863ல் அமெரிக்க உள்நாட்டுப் போரில் காயப்பட்ட தம் சகோதரரைக் கவனிக்க அவர் வாஷிங்டன் நகர் சென்றார். அங்கு காயப்பட்டோர், உடல் நலமற்றோர் யாவருக்கும் அவர் பணி செய்தார். ஜனாதிபதி லிங்கனின் நினைவாக, அவர் இரண்டு கவிதைகளை இயற்றினார்.

இறுதிச் செய்தி

1873ல் அவருக்குத் திமிர் வாத நோய் ஏற்பட்டது. உலக முழுவதுமிருந்து பலர் வந்து அவரோடு அளவளாவிப் பேசி விட்டுப் போவதுண்டு. 1892ல் இறக்கும் தறுவாயில் மிகவும் வருந்தியபோது அவர் விடுத்த இறுதிச் செய்தி அவர் தமது வாழ்நாள் முழுவதும் மக்களிடம் அன்பு பூண்டு வாழ்ந்தவர் என்பதைக் காட்டுகின்றது. "இன்றைய பெரிய இலக்கியங்களும், அரசியல், சமுதாய நூல்களும் எல்லா நாடுகளின் சிறந்த மக்களின் கருத்துக்களையும் கொண்டவையாக இருக்க வேண்டும்; இதுவே எனக்கு அதிகமதிகமாகத் தெளிவாய்த் தெரிகிறது" என்றார் அவர்.

"புல்லின் இதழ்கள்" இன்று மிகச் சிறந்த நூல் எனப் போற்றப்படுகின்றது. 25 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூல் அது. "புல்லின் இதழ்கள்" என்பதின் தமிழ்ப் பதிப்பு 1959ல் வெளியாயிற்று. இந்த உலகத்தில் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழ மக்களுக்குள்ள உரிமையை விட்மன் எடுத்துரைத்துள்ளார். அக் கொள்கை மாறுமல் நிலைபெற்றுள்ளது.

சிரித்துப் பார்!

மா. மலையழகன்

1. ஏன்தம்பி சோர்வுற்று நிலைகெட்டு விட்டாய்?
இனிமைப்புன் னகையையெங் கேவிட்டு விட்டாய்?
தேன்சொட்டும், திகட்டாத தின்பண்டம் அன்ன
இன்பம்சேர் வையத்தில் உன்துன்பம் என்ன?

(ஏன்)

2. படிக்கின்ற நூல்வாங்கப் பணமில்லாக் குறையோ?
பள்ளிக்குச் செல்லத்தான் யாதேனும் தடையோ?
அடித்தாரோ உன்தந்தை? அன்பான அன்னை
அணைக்காமல் வெறுத்தாளோ அமுதான உன்னை!

(ஏன்)

3. துடுக்கான சிலநண்பர் சுடுசொற்க ளாலே,
துளைத்தாரோ உன்னெஞ்சை அறியாமை யாலே?
அடுக்காத ஒன்றைநீ அறியாமல் செய்து,
அதற்காக வருத்தம்கொள் கின்றாயோ நொந்து?

(ஏன்)

4. மலையென்னத் துன்பங்கள் மலிந்தாலும், நெஞ்சம்
மருளாமல், மயங்காமல் மகிழ்வோடு கொஞ்சம்
அலைசிந்தும் ஒலியென்னச் **சிரித்துப்பார்!** தம்பி!
அழிவுற்று அலைந்தோடும் துயரங்கள் விம்மி!

(ஏன்)

வானத்தில் வட்டமிடும் வகுப்பறை

சென்ற செப்டம்பர் மாதத்தில் விடுமுறைக்குப் பின்னர் அமெரிக்கப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டதும், ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட அமெரிக்க மாணவர் விமான டெலிவிஷன் மூலம் கல்வி கற்கத் தொடங்கினர்.

மத்திய மேற்கு விமான டெலிவிஷன் கல்வித் திட்டத்தின் தலைமையகம் 'இண்டியானாவில் லபாயெட்' என்னும் 'நகரத்தில் உள்ளது. ஆரம்பப் பள்ளிகள் முதல் கல்லூரி வரைக்குமுள்ள 16 பாடங்கள் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு டெலிவிஷன் மூலம் பரப்பப்படுகின்றன.

நான்கு இஞ்சின் விமானம் ஒன்று டெலிவிஷன் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. அது நாடாவில் பதிவு செய்யப்பட்ட பாடங்களைக்கொண்டு போகிறது. 23,000 அடி உயரத்தில் பத்து மைல் வட்டாரத்தில் வட்டமிட்டு, அது ஒளி பரப்புகிறது. நாற்புறமும் 150 மைல் முதல் 200 மைல் வரை உள்ள ஆறு மாநிலப் பகுதிகளுக்கு அது பாடங்களைப் பரப்புகிறது. 5 லட்சம் மாணவர் அப்பாடங்களால் பயன் அடைகின்றனர். நாளொன்றுக்கு ஐந்து மணி நேரம் வாரத்தில் நான்கு நாட்களில் அப்பணி நடைபெறுகிறது.

அது மிகவும் உயரத்தில் பறப்பதால், தரையிலிருந்து 14 டெலிவிஷன் நிலையங்கள் ஒளி பரப்பக்கூடிய வட்டாரத்துக்கு அது தனியாகவே பரப்பக் கூடியதாக உள்ளது.

குறைந்த செலவில் பெரும்பான்மையான மாணவருக்குச் சிறந்த கல்வி வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கம் என்று திட்டத் தலைவர் ஜான் ஈ ஐவி கூறுகிறார். இங்கு பர்டியூ பல்கலைக் கழகத்தில் திட்டத்தின் தலைமையகம் உள்ளது. மத்திய மேற்கின் சிறந்த கல்வி இயல் அறிஞரின் குழு திட்டத்தை நடத்துகிறது. போர்டு அற நிலையமும், பல தொழில் கம்பெனிகளும் நிதி உதவி வழங்குகின்றன. அமெரிக்கக் கல்வி இலாகாவோடும், மாநில, உள்ளூர் கல்விக் குழுக்களோடும், திட்டத்தால் பயன் அடையும் பகுதிகளிலுள்ள கல்வி இயல் அறிஞரோடும் நெருங்கிய தொடர்புகொண்டு கல்வி இயல் அறிஞர் குழு பணியாற்றுகிறது.

செப்டம்பர் 11-ம் தேதி இத் திட்டத்தின் பணி ஆரம்பமாயிற்று. ஜனாதிபதி வாழ்த்துத் தந்தி ஒன்று அனுப்பியிருந்தார். "இது ஒரு சிறந்த சாதனை; அனைவரது நலனுக்காகவும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த, பொதுத் துறையும் சேர்ந்து பணியாற்றும் அமெரிக்க மரபுக்கு ஏற்ப விளங்குள்ள

வெற்றி இது'' என்று அவர் தம் வாழ்த்துரையில் கூறியுள்ளார். நமது காலத்தின் நிலைமையை நோக்கினல் நாம் தீர்க்கவேண்டிய கல்விப் பிரச்னை மிகப் பெரிய தாகவும் அவசரமானதாகவும் உள்ளது. இத்தகைய புதிய முறை அவசியமானது என்பதை அது காட்டுகிறது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்லூரி வகுப்புகளுக்கும், உயர்நிலைப் பள்ளியின் மேல் வகுப்புகளுக்கும் ரஸாயனம், உயிர் இயல், அல்ஜிப்ரா ஆகிய பாடங்கள் ஒளி பரப்பப்படுகின்றன; ஆட்சி இயல், சிவிக்ஸ், அமெரிக்க வரலாறு, உலக வரலாறு, பிரெஞ்சு மொழி, ஸ்பானிய மொழி, பொது விஞ்ஞானம் ஆகியவை உயர்நிலைப் பள்ளி மாணவருக்குக் கற்பிக்கப் படுகின்றன. தொடக்கப் பள்ளிகளுக்கு மொழிகள், ஓவியம், இசை, கணிதம், விஞ்ஞானம், சமூக இயல் ஆகியவைகளும் பரப்பப்படுகின்றன. அதுவுமல்லாமல், ஐந்தாவது ஆறாவது வகுப்புக்களில் படிக்கும் திறமை வாய்ந்த மாணவருக்குச் சிறப்புக் கணிதம் கற்பிக்கப்படுகிறது. வெவ்வேறு படிவங்களிலுள்ள மாணவருக்கு மொழிப் பயிற்சி, கற்பிக்கும் முறைகள் பற்றிய பயிற்சி, சர்வதேச உறவுகள் பற்றிய பாடம், சமூக இயல், பௌதிகம், இலக்கியம் முதலியவைகளும் இவ்வாறு டெலிவிஷன் மூலம் பரப்பப்படுகின்றன.

தெளிந்த அறிவும், கற்பிக்கும் திறனும் அமைந்த ஆசிரியர் 22 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். பல பள்ளிக் கூடங்களில் இல்லாத வசதிகளையும் கருவிகளையும் பயன்படுத்தி, அவர்கள் பாடங்களைக் கற்பிக்கிறார்கள்.

விமான டெலிவிஷன் பாடங்கள் 20 முதல் 30 நிமிஷங்கள் வரை நடக்கின்றன. பாடங்களுக்கு முன்பாவது பின்பாவது வகுப்பறை ஆசிரியர்கள் தலைமையில் அவை பற்றிப் பேச்சு நடக்கும்.

ஆசிரியர் செய்யவேண்டிய வேலையைச் செய்வது இத்திட்டத்தின் நோக்கம் அன்று. ஆசிரியருக்கு உதவி செய்வதே இதன் நோக்கம். நாட்டுப்புறங்களிலுள்ள சிறிய பள்ளிகள் பெற முடியாத கல்வி இதன் மூலம் அவற்றிற்குக் கிடைக்கிறது.

இத்திட்டத்தில் கலந்து கொள்ளும் பள்ளிகளும் கல்லூரிகளும் தகுதியான டெலிவிஷன் பெட்டிகள் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். அவை பெயருக்கு ஒரு சிறு தொகை கொடுக்க வேண்டியதாகும்.

1962 ஜூன் வரை இந்தத் திட்டம் போர்டு அற நிலையம், கம்பெனிகள் முதலியவற்றின் உதவியால் நடைபெறும். இது பயன்படும் திட்டமாக விளங்கினல், நிலையாக நடத்தப்படும். இதில் கலந்துகொள்ளும் பள்ளிகளும் கல்லூரிகளும் செலவுகளை ஏற்கவேண்டியதாகும்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.